# LAABH SAMACHAR

Volume: 09 Issue : 02 **May 2020** Tamil & English Monthly Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE



Emirates IndiGo Lufthansa spiceJet flying for everyone

அஸ்கி பிளையிட் டிக்கெட் அவ்ரோஜொல் உன்னோ மோளும் அப்பை

K.K. Nagar, Madurai. Mob : 9787 066 066

வேதவல்லி ஹாலிடேஸ்




மத்திய மற்றும் மாநில அரசுகள் விடுத்த கொரோனா நிவாரண நிதி வேண்டுகோளை ஏற்று நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், அங்கத்தினர்களிடம் நிதி அளிக்கும்படி கேட்டுக்கொண்டது. அங்கத்தினர்கள் கொரோனா நிவாரண தொகையாக சேம்பருக்கு அளித்த நிதியை கடந்த 13.05.2020 அன்று மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. டி.ஜி. வினய் அவர்களிடம் சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து காசோலையை வழங்கினர்.




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
ஸௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

ஸௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை–1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536




METRO
அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343


TEXMO ®
Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps
AQUA GROUP
Authorised Dealer:
Madurai Pipe
76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.
AQUATEX ®
Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems
Borewell Submersibles
Single Phase Jet Pumps
Pressure Boosting Systems
Electric Motors
Single Phase Domestic Pumps
Agricultural Monoblocks
Open-well Submersibles


LAABH
SAMACHAR
MULTI COLOR ADVT.
Contact: 93441 97952



LAABH
SAMACHAR
MULTI COLOR ADVT.
Contact: 93441 97952

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| P.M. Murali | Chairman | 94434 68476 |
| S.K.B. Chandraprakash | Secretary | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அஸிகெதெ ஃகோ மொன்னு பொரெ*

## நமஸ்கார்...

கொரோனா (கோவிட்-19) பெருந்தொற்று பாதிப்பினால் ஊரடங்கு உள்ள இந்த தருணத்தில் அரசு சில தளர்வுகளுடன் / கட்டுப்பாடுகளுடன் தொழில் நிறுவனங்களை இயக்கலாம் என்று அறிவித்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

பல தொழில் நிறுவனங்களுக்கு இந்த கொரோனா ஊரடங்கு பாதிப்பினால் தொழிலாளர்களுக்கு சம்பளம் தர இயலாத சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளன. இந்த தருணத்தில், மத்திய நிதி அமைச்சரின் தொழில் நிறுவனங்களுக்கான கடன் உதவி திட்டங்கள், நிறுவனங்களின் வரையறை திருத்தம், சலுகைகள் போன்ற அறிவிப்புகள் வரவேற்கத்தக்கதாக உள்ளது.

தொழில் நிறுவனங்கள் பெற்றிருக்கும் வங்கிக் கடனுக்கான வட்டியையும் குறைந்தது 3 மாதங்களுக்கு தள்ளுபடி செய்திருந்தால் மிகவும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும்.

உலக இயக்கத்தில் கொரோனா தந்த இடைவெளி பொருளாதாரத்திலும், வாழ்வியல் முறையிலும் பல்வேறு மாற்றங்களை நிகழ்த்தியுள்ளது. மருந்தும் இல்லாமல், முடிவும் தெரியாமல் சிக்கித்தவிக்கும் இந்த சூழலில், சில பாதுகாப்பு அம்சங்களுடன் செயல்பட்டால் நோயிலிருந்து தப்பிக்கலாம் என்று அரசு கூறுகிறது. இதனுடன் வாழ பழகிக்கொள்ள வேண்டும் என்று சில நிபுணர்கள் கூறுகிறார்கள். தற்போதைய தீர்வு, நாம் பாதுகாப்புடன் இயங்க அரசு மற்றும் மருத்துவர்கள் கூறும் வழிமுறைகளுடன் செயல்படுவதே ஆகும்.

ஆகவே, தொழில் முனைவோர்கள் தங்கள் இழப்புகளை எதிர்கொண்டு முழு மூச்சுடன் செயல்படுங்கள். அதே சமயத்தில் பாதுகாப்புடனும் இயங்க தயாராகுங்கள். நிறுவனக் கட்டமைப்புகளை மாற்றியமைத்து செயல்படுங்கள். நிறுவனத்தில் / அலுவலகத்தில் சானிடைசரை பயன்படுத்தங்கள், முகக்கவசத்தை அணியுங்கள், இடைவெளியை பின்பற்றுங்கள். ஊழியர்களை கண்காணிப்புடன் நடத்துங்கள்.

**செயல்படுவோம் விழிப்புடன்!...** நன்றி...

– குமரன் B ஜகுவா

## திருக்குறள்

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தாற் செயின்.

சௌராஷ்ட்ர மொழியில்: த[4]க்னாத்தெ ந்ஹறாஸ்த த[3]யவேஸ்ந்ஹீ லுக்குனா
லெக்கும் ஹடிவி கரெத்

**பொருள்:** (அச்சமற்ற வீரனுக்கும் தக்க இடம் வேண்டும்) அஞ்சாமை இருந்தால் போதும். வேறு துணை வேண்டியதில்லை என்பவர்களுக்கும் சரியான பாதுகாப்புள்ள இடம் அமைந்தால் அந்த அஞ்சாமை குறையாமல் இருக்கும்.

அதிகாரம் 50 | இடன் அறிதல் (காரியம் செய்யத்தக்க இடத்தை அறிதல்) | அரசியல்

# பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

17.04.2020 – கொரோனா வைரஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சி ZOOM (Video Conferencing App.) செயலி மூலம் காலை 11 மணி அளவில் நடைபெற்றது. மரு. **அவந்திகா பாய்** அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு உரையாற்றினார். இணைச் செயலாளர் திரு. K.K. **குபேந்திரன்** அவர்கள் இந்த சிறப்புக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

22.04.2020 – நமது ஸௌராஷ்ட்ர சமூக மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நமது சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. T.E. **யோகேஷ்** அவர்கள் தயாரித்த மாதிரி பட்டியல் அடிப்படையில் சிறப்பு ஆலோசனைக்கூட்டம் ZOOM செயலியின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் சேம்பரின் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள், தொழில் முன்னோடிகள் மற்றும் ஆலோசகர்கள் கலந்து கொண்டனர்.

25.04.2020 – கொரோனாவின் விளைவுகள் என்ற தலைப்பில் சிறப்பு வழக்காடு மன்றம் ZOOM செயலின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. கொரோனாவால் நஷ்டமா?.. லாபமா?.. என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த வழக்காடு மன்றத்தில் சேம்பர் துணைத் தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் நடுவராக செயல்பட்டார். நஷ்டமே என வாதாட சேம்பர் இணைச் செயலாளர் திரு. J.S. **சாயிஜீவன்** அவர்களும், லாபமே என வாதாட சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. T.K. **சிவநாத்பாபு** அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இணைச் செயலாளர் திரு. K.K. **குபேந்திரன்** அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

27.04.2020 – **Business After Lockdown-II** கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக திருநெல்வேலி, IIPE லட்சுமிராமன் பள்ளியின் சேர்மன் திரு. S.R. **அனந்தராமன்**, அவர்கள் மும்பை, VGP அப்பேரல்ஸ் திரு. **கணேஷ் கொண்டா சுந்தரம்**, கோவை, SRE கார்ப்பரேசன் திரு. N.S. **ராஜன்** ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

28.04.2020 – **Business After Lockdown-III** கூட்டத்தில், கும்பகோணம், ராயா சில்க்ஸ் திரு. **ராயா கோவிந்தராஜன்**, ஓசூர், சுப்ரீம் பேக்கேஜஸ் திரு. K.Ve. **நாகராஜன்** மற்றும் திண்டுக்கல், சிவபாலாஜி ஸ்டீல்ஸ் திரு. T.S. **சிவப்பிரகாஷ்** ஆகிய மூன்று சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர்.

29.04.2020 – **Business After Lockdown-IV** கூட்டத்தில், ராசிபுரம், Fibretuff Products India Pvt. Ltd. திரு. S. **நந்தகுமார்**, ஆரணி, ரதி சில்க்ஸ் & சாரீஸ் திருமதி. **சாந்தி ரகுநாத்** மற்றும் மும்பை, S.Executive Vice President & Head - Corporate Resolution & New Business, Asset Reconstruction Company (India) Limited திரு. S.K. **அமர்நாத்** ஆகிய மூன்று சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

மேற்படி தொடர் மூன்று கூட்டங்களில் சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் தலைமை தாங்கினார். திரு. T.R. **சரவணன்** அவர்கள் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்.

05.05.2020 – நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் மாதாந்திர தொழில் வர்த்தக கூட்டம், ZOOM செயலியில் **விவசாயத் தொழில் வாய்ப்புகள்**, மற்றும் **கோவிட்-19 ஊரடங்கிற்கு பிறகு தொழில்களை எவ்வாறு முறையாக இயக்குவது** ஆகிய தலைப்புகளில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக புது டில்லி, Parliament House, Lok Sabha Secretariate - Deputy Director திரு. R. **கணேஷ்** மற்றும் பெங்களூரு, Conscientia Consultancy Pvt. Ltd. Founder and Director திரு. K.V. **ஓம்பிரகாஷ்** ஆகியோர் கலந்த கொண்டு சிறப்புரையாற்றினர். இந்த நிகழ்ச்சியை சேம்பர் நிகழ்ச்சிக்குழு தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் ஏற்பாடு செய்தார்.

– K.K. **தினேஷ்**


**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

**Kindly Save our Whatsapp No:**
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**


# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

கடந்த 50 நாட்களாக, ஊரடங்கில் வீட்டில் அடங்கியிருந்த நாம் தற்போது சில கட்டுப்பாடுகளுடன் செயல்பட தொடங்கியுள்ளோம்.

ஊரடங்கின் காரணமாக, சென்ற மாதமும், இந்த மாதமும் மின் புத்தகமாக வெளியிட வேண்டியதாயிற்று. இந்த மின் புத்தகத்திற்கு நமது சேம்பரின் முன்னாள் தலைவர்கள், நிர்வாகஸ்தர்கள் மற்றும் அங்கத்தினர்கள் பலரும் வரவேற்பு செய்கின்றனர்.

இனி வரும் மாதங்களில், நமது லாப் ஸமாச்சார் அச்சிடப்பட்ட இதழாகவும், மின் இதழாகவும் வெளிவரும்.

மேலும், லாப் ஸமாச்சாரில் விளம்பரங்கள் கொடுக்கும் நிறுவனங்கள் தங்கள் வீடியோ விளம்பரங்கள் அல்லது இணைய முகவரி அனுப்பினால் அதற்கான Link-ஐ நமது மின் புத்தகத்தில் இணைக்கப்படும் என்பதில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரடங்கினாலும், நமது உள்ளத்திற்கு உற்சாகம் ஊட்டிய நமது நிகழ்ச்சிக்குழு உறுப்பினர்களான திரு. T.R. சரவணன், திரு. T.M. ருபேஷ் பாபு, திரு. S.S. பிரேம் குமார் மற்றும் திரு. A.T. பாஸ்கர் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

- B.S. **ஜெனார்த்தனன்**

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk



# கொரோனா வைரஸ் விழிப்புணர்வு கூட்டம்




கொரோனா வைரஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சி ZOOM (Video Conferencing App.) செயலி மூலம் கடந்த 17.04.2020 அன்று காலை 11 மணி அளவில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் தலைமை தாங்கினார். மரு. **அவந்திகா பாய்** அவர்கள் சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டார். இணைச் செயலாளர் திரு. K.K. **குபேந்திரன்** அவர்கள் இந்த சிறப்புக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் தலைமை உரையாற்றினார். இணைச் செயலாளர் திரு. J.S. **சாயிஜீவன்** அவர்கள் மரு. **அவந்திகா பாய்** அவர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

மரு. **அவந்திகா பாய்** அவர்கள் தனது உரையில், **நோவல் கொரோனா வைரஸ்** ஒரு பேண்டமிக் (Pandemic) வைரஸ். **நோவல்** என்றால் 'புதிய' என்று பொருள். மேலும், உலகம் முழுவதும் தொற்று ஏற்படுத்தி வருவதால் **பேண்டமிக்** என்று அழைக்கப்படுகிறது.


இந்த புதிய நோய் கிருமிக்கு மருந்துகள் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. தடுப்பு மருந்துகளும் இதற்கு இல்லை. இந்த கிருமியானது, அளவிலும் வடிவத்திலும் தன்னை மாற்றிக் கொள்ளும் இயல்புடையது. இக்கிருமி அடர்த்திமிக்கது. ஆகவே காற்றின் மூலம் வெகு தூரம் பயணம் செய்ய இயலாது. ஒருவருக்கு கொரோனா தொற்று இருந்தால், அவரின் சளி, இருமல், தும்மலின் போது வெளியாகும் எச்சிலின் மூலம் குறைந்தது 3 மீட்டர் தூரம் வரை இது பரவி அருகில் உள்ள பொருட்களின் மீதோ தரையிலோ படியும். அவ்வாறு படியும் அக்கிருமி, துணி, இரும்பு, பிளாஸ்டிக் போன்றவற்றில் குறிப்பிட்ட நாட்கள் உயிருடன் இருக்கும். நம் கண்ணுக்கு புலனாகாத மிக நுண்ணிய கிருமியை அச்சமயத்தில் நாம் அறியாமல் அதன்மீது கை வைக்கும்போது நமக்கும் கொரோனா தொற்று ஏற்படுகிறது என்று மிக அழகாக கொரோனா வைரஸின் தன்மை மற்றும் நம்மை அது எவ்வாறு பாதிக்கிறது என்பதை விளக்கினார்.

அதோடு, இந்த சூழ்நிலையில் நாம் கொரோனா வைரஸின் மீது அச்சம் கொள்ளத்தேவையில்லை அதற்காக அசாதாரணமாகவும் இருந்துவிடக்கூடாது.

இந்த வைரஸிடமிருந்து நம்மை காத்துக்கொள்ள எளிய வழிமுறைகளை பின்பற்றினாலே போதுமானது. எந்த ஒரு பொருளை தொடுவதற்கு முன்னும் பின்னும் கைகளை நன்கு கழுவ வேண்டும். (கை கழுவும் முறைகளை தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகி வருவதை பார்த்திருப்பீர்கள்.) ஒருவர் மற்றொருவரை குறைந்தது 3 மீட்டர் அளவு தூர இடைவெளியில் இருப்பது நல்லது. முகக்கவசம் அவசியம். கைகளை கழுவ சானிடைசர் தான் தேவை என்றில்லை. நாம் அன்றாடம் பயன்படுத்தும் சோப்பே போதுமானது. அதோடு, மாஸ்க் இல்லாதவர்கள் வீட்டில் இருக்கும் சாதாரண துணியைக்கூட கட்டிக்கொள்ளலாம். இருமல் / தும்மல், சளி, காய்ச்சல் ஏற்பட்டால் உடனே மருத்துவரை அணுக வேண்டும் என்று ஆலோசனைகளையும் வழங்கினார்.

மிகவும் அழகாக எடுத்துரைத்த மரு. **அவந்திகா பாய்** அவர்களுக்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொண்டது. பலர் தங்களின் சந்தேகங்களை முன்வைத்தனர் அதற்கு மிக அருமையாக பதிலளித்து உரையை நிறைவு செய்தார். ஆன்லைன் மூலம் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு அங்கத்தினர்கள் பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு சிறப்பித்தினர்.

இறுதியாக, சேம்பர் இணைச் செயலாளர் திரு. K.K. **குபேந்திரன்** அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.



ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
**Prof. Dr. M.V. SUBBURAMAN**
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)
Cell: 90805 54802, 99424 90217



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# சிறப்பு ஆலோசனைக்கூட்டம்




நமது செளராஷ்ட்ர சமூக மக்களின் பொருளாதாரத்தை தக்க வைத்துக்கொள்ளும் நோக்கில் நமது சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. T.E. **யோகேஷ்** அவர்கள் மாதிரி பட்டியல் ஒன்றை தயார் செய்துள்ளார்.

இது குறித்து சிறப்புக்கூட்டம் கடந்த 22.02.2020 அன்று ZOOM செயலியின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் சேம்பரின் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள், தொழில் முன்னோடிகள் மற்றும் ஆலோசகர்கள் கலந்து கொண்டனர்.

அவர் தனது மாதிரி பட்டியலில் நமது சமூக மக்கள் தோராயமாக எவ்வளவு குடும்பங்கள் உள்ளன. அவர்களின் பொருளாதாரம், அவர்களின் தேவைகள், அதாவது, உணவு, மருத்துவம், ஆபாரணம் போன்றவைகளைக் கணக்கிட்டு மதிப்பிட்டிருந்தார். இந்த பொருளாதார தகவலைக் கொண்டு நமது சமூக மக்கள் நம் தொழில் முனைவோர்களிடம் பொருட்களை வாங்க வழி வகை செய்ய வேண்டும். ஒவ்வொரு தொழில் முனைவோர்களும் நமது செள. கூட்டுறவு வங்கியில் கணக்குகளை துவக்க வேண்டும். க்ளஸ்டர் ஏற்படுத்த வேண்டும் என பல்வேறு திட்டங்களை கூட்டத்தில் தெரிவித்தார். இதற்கு கூட்டத்தில் கலந்து கொண்ட ஆலோசகர்கள், தொழில் முன்னோடிகள் பலர் வரவேற்றதுடன், அவர்களின் கருத்துக்களையும் தெரிவித்தனர்.

கொரோனா ஊரடங்கிலும் இது போன்று சிந்தித்து பட்டியலை உருவாக்கிய திரு. T.E. **யோகேஷ்** அவர்களை கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் பாராட்டுக்களை தெரிவித்தனர். அவரின் எதிர்பார்ப்பு நிறைவேற சேம்பர் முயற்சிகள் மேற்கொள்ளும்.

# கொரோனா – வழக்காடுமன்றம்



கொரோனவின் விளைவுகள் என்ற தலைப்பில் சிறப்பு வழக்காடு மன்றம் கடந்த 25.04.2020 அன்று ZOOM செயலின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. கொரோனா-வால் இலாபமா? நஷ்டமா? என்ற வழக்காடு மன்றத்தில் சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் நடுவராக செயல்பட்டார். இதில் நஷ்டமே என வாதாட சேம்பர் இணைச் செயலாளர் திரு. J.S. **சாயிஜீவன்** அவர்களும், லாபமே என வாதாட சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. T.K. **சிவநாத்பாபு** அவர்களும் கலந்து கொண்டனர். இணைச் செயலாளர் திரு. K.K. **குபேந்திரன்** அவர்கள் இந்த சிறப்புக் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

கொரோனா ஊரடங்கில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொழுதுபோக்கு நிகழ்ச்சியாக இது நடத்தப்பட்டது. சேம்பர் அங்கத்தினர்கள் பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். வழக்காடு மன்றத்தை நடுவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் துவக்கி வைத்தார்.

முதலில், நஷ்டமே என்ற தலைப்பிற்கு பேசிய திரு. J.S. **சாயிஜீவன்** அவர்கள், உலக பொருளாதார வீழ்ச்சி. பங்கு சந்தைகள் சரிவு, தனி மனித வாழ்வாதாரம், மனித உயிர் பலிகள், உடல் பாதிப்புகள் போன்றவற்றை குறித்து பேசினார்.

லாபமே என்று பேசிய திரு. T.K. **சிவநாத்பாபு** அவர்கள், இயற்கையை எதிர்த்து செயல்பட்ட மனித குலத்தை கொரோனா வைரஸின் மூலம் தன்னை மீட்டுக்கொண்டுள்ளது என்று தெரிவித்தார். பல நாடுகளில் ஆறுகள் தூய்மையானது, ஓசோன் ஓட்டை அடைப்பு, காட்டில் வாழும் விலங்குகள், கடல் வாழ் உயிரினங்கள் அனைத்தும் மகிழ்ச்சியில் உள்ளது. நம் முன்னோர்கள் கூறிய பல்வேறு முன்னெச்சரிக்கையான அறிவுரைகளை நாம் ஏற்காமல் செய்யாததன் விளைவு இன்று ஏற்பட்டிருக்கும் கொரோனா நோய் தொற்று. இந்த நோய், நம் நாட்டின் பழமையான செயல்பாடுகள் எல்லாம் அறிவுப்பூர்வமானவை என்று ஒவ்வொரு மனிதனையும் புரிய வைத்துள்ளது. ஆகவே இது நன்மையே என்று தெரிவித்தார்.

இறுதியாக நடுவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் தமது தீர்ப்பிற்கு கருத்தாக, முதலில் ஒரு மனித உடல் மனிதன் என்ற பெயர் பெற உயிர் முக்கியமாகிறது. உடலும் உயிரும் ஆரோக்கியமாக இருக்கும் பட்சத்தில் பொருட்களை ஈட்டுவது அரிதான காரியமல்ல. இந்த கொரோன வைரஸால் பெரும் பாதிப்பு பொருளாதாரத்திற்கே என்றாலும், வேகமாக ஓடும் உலகில் தன்னிலை மறந்த மனிதன் இன்று கொரோனாவல் சற்று சிந்தித்து செயல்பட துவங்கியுள்ளான்.

ஆகவே கொரோனாவால் லாபமே என்று தமது இறுதி தீர்ப்பை வழங்கி வழக்காடு மன்றத்தை நிறைவு செய்தார்.




மாஸ்க்கின் முன் பக்கத்தை தொட்டு அணியக்கூடாது.

தொழில் முனைவோர்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக திகழ்பவர்கள். இன்று கொரோனா வைரஸ் தாக்கத்தினால் தொழில்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை எவ்வாறு எதிர்கொண்டு சீர் செய்வது என்பது பற்றி அறிந்து கொள்வதற்காக நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் **Business After Lockdown** என்ற தலைப்பில் தொடர்ந்து அடுத்தத்த மூன்று நாட்களுக்கு பல முன்னணி தொழில் முனைவோர்கள், ஆலோசகர்களுடன் சிறப்புக் கூட்டத்தை ZOOM செயலியின் மூலம் ஏற்பாடு செய்திருந்தது.

அதன்படி 27.04.2020 அன்று நடைபெற்ற **இரண்டாவது Business After Lockdown** கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக திருநெல்வேலி, IIPE லட்சுமிராமன் பள்ளியின் சேர்மன் திரு. S.R. **அனந்தராமன்**, மும்பை, VGP அப்பேரல்ஸ் திரு. **கணேஷ் கொண்டா சுந்தரம்**, கோவை, SRE கார்ப்பரேசன் திரு. N.S. **ராஜன்** ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் தலைமை தாங்கினார். திரு. T.R. **சரவணன்** அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

முதலில், சிறப்பு விருந்தினர் திரு. S.R. **அனந்தராமன்** அவர்களை சேம்பர் செயற்குழு உறுப்பினர் / லாப் ஸமாச்சார் இதழ் ஆசிரியர் திரு. B.S. **ஜனார்த்தனன்** அவர்கள் அறிமுகம் செய்தார்.

திரு. S.R. **அனந்தராமன்** அவர்கள் தனது உரையில், தொடர் ஊரடங்கினால் தொழில் முனைவோர்கள் தான் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த சூழலில் நம் தொழிலை மீட்க தொழிலாளர்கள் அவசியம். அவர்களுடன் இந்த சூழலில் தொடர்பில் இருப்பது அவசியமாகிறது. பிறகு, மூலப்பொருட்களை பெருவதில் ஏற்படும் சிக்கல்கள் ஆகியன குறித்து மிக அழகாக பேசினார். அவரைத் தொடர்ந்து,

இரண்டாவதாக, சிறப்பு விருந்தினர் திரு. **கணேஷ் கொண்டா சுந்தரம்** அவர்களை சேம்பர் முன்னாள் தலைவர் திரு. E.R. **குமரேசன்** அவர்கள் அறிமுகம் செய்தார்.

திரு. **கணேஷ் கொண்டா சுந்தரம்** அவர்கள் பேசுகையில், கொரோனா வைரஸினால் தொழில் முனைவோர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. தொழில் முனைவோர்களுக்கு தற்போது ஒரு தடங்கல் ஏற்பட்டுள்ளது. இது ஒரு மிகப்பெரிய பிரச்சனையாக கருத வேண்டிய அவசியமில்லை. சரியான வாடிக்கையாளரை இந்த சூழலில் கண்டறிய முடிகிறது. தீபாவளிக்குப் பிறகு நம் தொழில்கள் அனைத்தும் மேம்படும் என்று நம்புகிறேன். முக்கியமான மூன்று தகவல்களை கூற விரும்புகிறேன், ஒவ்வொரு தொழில் முனைவோர்களும் தற்போது தொழிலாளர்கள் மற்றும் தொழில் சார்ந்த நபர்களிடத்தில் தொடர்பில் இருந்து கொண்டே இருக்க வேண்டும். செலவுகளை குறைத்துக்கொள்ள வேண்டியது அவசியம் மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளை தேட வேண்டும் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

மூன்றவதாக, சிறப்பு விருந்தினர் திரு. N.S. **ராஜன்** அவர்களை சேம்பர் செயற்குழு உறுப்பினர் / நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் அறிமுகம் செய்தார்.

திரு. N.S. **ராஜன்** அவர்கள் பேசுகையில், இந்த சூழலில் நம் தொழிலாளர்களை நாம் அவசியம் பாதுகாக்க வேண்டும். தொழில்கள் இயங்காத நிலையில் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்குவதில் சிரமம் தான். இருப்பினும் அவர்களின்றி தொழிலை இயக்குவதும் சாத்தியம் இல்லை. இதனை கருத்தில் கொண்டு ஒரு மாத சம்பளத்தில் 60% அளவிற்கு கொடுக்கலாம். இது ஊழியர்களுக்கும், நிறுவனத்திற்கும் பரஸ்பரம் பயன்தரும். இந்த கொரோனா பாதிப்பு சூழலில் புதிய எந்திரங்களை எதையும் விற்க வேண்டாம். விற்பனை நிச்சயம் 30% முதல் 50% வரை குறைய வாய்ப்புள்ளன. ஊரடங்கிற்கு பிறகு நிலுவை தொகைகளை வசூலிக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். ஆன்லைன் தொழில்கள் இனி வரும் காலங்களில் அதிகரிக்க வாய்ப்புள்ளன. புதிய நோக்குடன், புதிய வழிமுறைகளில் உங்கள் தொழில் வழிநடத்திச்செல்ல முயற்சி மேற்கொள்ள திட்டமிடுங்கள் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் பலர் தங்களின் சந்தேகங்களுக்கு விடை கேட்டறிந்தனர்.

இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

# Business After Lockdown - II



# Business After Lockdown - III

மூன்றாவது முறையாக **Business After Lockdown** என்ற தலைப்பில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் பல முன்னணி தொழில் முனைவோர்கள், ஆலோசகர்களுடன் சிறப்புக் கூட்டத்தை 28.04.2020 அன்று மாலை 6.30 மணி அளவில் ZOOM செயலியின் மூலம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த கூட்டத்தில், கும்பகோணம், ராயா சில்க்ஸ் திரு. **ராயா கோவிந்தராஜன்**, ஓசூர், சுப்ரீம் பேக்கேஜஸ் திரு. K.Ve. **நாகராஜன்** மற்றும் திண்டுக்கல், சிவபாலாஜி ஸ்டீல்ஸ் திரு. T.S. **சிவப்பிரகாஷ்** ஆகிய மூன்று சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் தலைமை தாங்கினார். திரு. T.R. **சரவணன்** அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

முதலில், சிறப்பு விருந்தினர் திரு. **ராயா கோவிந்தராஜன்** அவர்களை சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. S.S. **பிரேம் குமார்** அவர்கள் அறிமுகம் செய்தார்.

திரு. **ராயா கோவிந்தராஜன்** அவர்கள் தனது உரையில், இந்த கொரோனா ஊரடங்கினால் பாதிக்கப்பட்டுள்ள நம் தொழிலை எவ்வாறு நிலைநிறுத்துவது என்று அச்சம் கொள்ளாமல் துணிந்து செயல்படுங்கள். ஒரு தொழில் முனைவோருக்கு தேவையான முதல் தகுதி துணிவு. ஆகையால் துணிவோடு செயல்படுங்கள். தொழிலை துவங்கியதும் முதலில் விற்பனையை துவக்குங்கள். அடுத்த இரண்டு வருடங்களுக்கு லாபத்தை எதிர்பார்க்காதீர்கள். ஊழியர்களை கவனியுங்கள் என்று கூறியதுடன் பல்வேறு பயனுள்ள தகவல்களையும் வழங்கி தனது உரையை நிறைவு செய்தார்.

இரண்டாவதாக, சிறப்பு விருந்தினர் திரு. K.Ve. **நாகராஜன்** அவர்கள் பேசுகையில், புதிய வாய்ப்புகளை இந்த தருணத்தில் கண்டறியும் தருணம் இது. ஏற்றுமதி தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும். பணியாளர்களை இந்த தருணத்தில் அரவணைத்துச் செல்ல வேண்டும் மேலும் பல தகவல்களை அளித்து உரையை நிறைவு செய்தார்.

மூன்றாவதாக, சிறப்பு விருந்தினர் திரு. T.S. **சிவப்பிரகாஷ்** அவர்களை சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. T.N. **சூரியப்பிரகாஷ்** அவர்கள் அறிமுகம் செய்தார்.

திரு. T..S. **சிவப்பிரகாஷ்** அவர்கள் தனது உரையில், எந்த சூழலிலும் மனிதனில் அடிப்படைத் தேவைக்கான தொழில்களுக்கு வீழ்ச்சியே இல்லை. தொழில்கள் இன்று இயங்கவில்லை என்பதற்காக சாதாரணமாக இருந்துவிடாமல், புதிய தொழில் வாய்ப்புகள் மற்றும் புதுமையான முயற்சிகளை செய்ய இந்த தருணத்தில் திட்டமிடல் அவசியம்.

நம் சமூகத்தில் டெக்ஸ்டைல்க்கு அடுத்தபடியாக உணவு தயாரிப்பில் சிறந்தவர்கள். உணவு உற்பத்திக்கான க்ளஸ்டரை ஏற்படுத்தலாம்.

இந்த சந்தர்ப்பத்தில், நம் நிறுவனத்தின் / தயாரிப்புப் பொருட்களின் விளம்பரத்தை சமூக வலைதளங்களில் விளம்பரப்படுத்தலாம். ஊரடங்கு காரணமாக வீட்டில் டிவி மற்றும் ஸ்மார்ட் போன்களின் பயன்பாடுகள் அதிகம் இருக்கும். இந்த தருணத்தில் முகநூல் போன்ற சமூக வலைதளங்களில் விளம்பரம் செய்தால் ஊரடங்கு முடிந்து தொழில் துவங்கும் போது வியாபாரத்தை பெருக வாய்ப்புள்ளது என்று பல்வேறு புதிய சிந்தனைகள் வழங்கி தனது உரையை நிறைவு செய்தார்.

கூட்டத்திற்கு அங்கத்தினர்கள் பலர் தங்களின் கருத்துக்களையும், சந்தேகங்களையும் கேட்டறிந்தனர்.

இறுதியாக, பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.



நான்காவது முறையாக **Business After Lockdown** என்ற தலைப்பில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் பல முன்னணி தொழில் முனைவோர்கள், ஆலோசகர்களுடன் சிறப்புக் கூட்டத்தை 29.04.2020 அன்று மாலை 6.30 மணி அளவில் ZOOM செயலியின் மூலம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த கூட்டத்திலும் மூன்று சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர். அவர்கள், ராசிபுரம், Fibretuff Products India Pvt. Ltd. திரு. S. **நந்தகுமார்**, ஆரணி, ரதி சில்க்ஸ் & சாரீஸ் திருமதி. **சாந்தி ரகுநாத்** மற்றும் மும்பை, S.Executive Vice President & Head - Corporate Resolution & New Business, Asset Reconstruction Company (India) Limited திரு. S.K. **அமர்நாத்** ஆவர்.

இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஐகுவா** அவர்கள் தலைமை தாங்கினார். திரு. T.R. **சரவணன்** அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

முதலில், சிறப்பு விருந்தினர் திரு. S. **நந்தகுமார்** அவர்களை சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. S.M. **கார்த்தி குமரன்** அவர்கள் அறிமுகம் செய்தார்.

திரு. S. **நந்தகுமார்** அவர்கள் தனது உரையில், கொரோனா வைரஸ் தாக்கத்தால் வேலை வாய்ப்புகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இனி வரும் காலங்கள் வேலைக்கு பணியமர்த்துவதை விட Job Work-க்குகளை அளித்து பணிச்சுமைகளை குறைத்துக்கொள்ளலாம். அப்போது தான் இது போன்ற இக்கட்டான காலகட்டங்களில் தொழில் முனைவோருக்கு பெரிய பாதிப்புகளில் இருந்து உடனே மீள முடியம் அதோடு, சிறு தொழில்களும் பெருக வாய்ப்புகள் அதிகம் உள்ளது என கருத்தை தெரிவித்தார். பின்னர், இணை தொழில் ஒன்றை சிறிய அளவில் செய்ய முயற்சிக்க வேண்டும் ஒரு தொழில் சிக்கல் ஏற்படுத்தினால் இணை தொழில் கைகொடுக்கும் என்பதை மற்றொரு கருத்தாக தெரிவித்தார். மேலும், இனி வரும் காலங்களில் கடன்களை வாங்குவதை குறைத்துக்கொள்வது நலம் என்று கூறி தமது உரையை நிறைவு செய்தார்.

இரண்டாவதாக, சிறப்பு விருந்தினர் திருமதி. **சாந்தி ரகுநாத்** அவர்களை சேம்பர் உறுப்பினர் திரு. **கணேஷ் கொண்டா சுந்தரம்** அவர்கள் அறிமுகம் செய்தார்.

திருமதி. **சாந்தி ரகுநாத்** அவர்கள் தனது உரையில், தொழிலாளர்களை இந்த தருணத்தில் நாம் அவர்களுடன் தொடர்பில் இருந்து பாதுகாத்து செல்வது அவசியமாகிறது. அவர்களுக்கு நம் நிறுவனத்தின் வளர்ச்சியைப் பொருத்து இயன்ற சதவிகித அடிப்படையில் அவசியம் அவர்களுக்கு சம்பளத்தை அளித்தே ஆக வேண்டும். இந்த தருணத்தில் புதிய முயற்சிகளை மேற்கொள்வது அவசியம். தாம் டெக்ஸ்டைல் சில்க் துறையில் உள்ளதால், தாம் ஒரு புதிய முயற்சியாக பட்டுத்துணியில் மாஸ்க் தயாரிக்கலாம் என்ற யோசனையை தெரிவித்தார். பட்டு நேர்மறை சக்திகளை கிரகிக்கக் கூடியது. தீநுண்கிருமிகளை அண்ட விடாது. ஆகையால் இதனை மையப்படுத்தி இந்த முயற்சியை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தார்.

கடைசியாக, சிறப்பு விருந்தினர் திரு. S.K. **அமர்நாத்** அவர்களை சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. T.M. **ருபேஷ் பாபு** அவர்கள் அறிமுகம் செய்தார்.

திரு. S.K. **அமர்நாத்** அவர்கள் தனது உரையில், இந்த கொரோனா வைரஸ் தாக்குதல் தருணத்தில் நம் உடல் ஆரோக்கியத்தை முதலில் கவனித்துக்கொள்ள வேண்டும். தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நலனிலும் அக்கறை செலுத்த வேண்டும். சரக்கு அளிப்பவர்களிடம் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். நாம், நம் தொழிலாளர்கள், சப்ளையர்கள் இம்மூவரும் முக்கியமானவர்கள். இவர்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது அவசியம். இத்துடன், புதிய தொழில் நுட்பங்களை நாடுங்கள், செலவுகளை குறைக்கும் வழிமுறைகளை கையாளுங்கள், வாடிக்கையாளர்களிடம் நிலுவைத் தொகைகளை பெறுவதில் கவனம் செலுத்துங்கள். அதோடு, உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்வதில் கவனத்துடன் செயல்படுங்கள் என்று அருமையாக பேசி தனது உரையை நிறைவு செய்தார்.

கூட்டத்திற்கு கலந்து கொண்ட அனைவரும் தங்கள் கேள்விகளுக்கான விடையை கேட்டறிந்தனர்.

இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

# Business After Lockdown - IV





# விவசாயத் தொழில் வாய்ப்புகள் மற்றும்



## கோவிட்-19 ஊரடங்கிற்கு பிறகு

# தொழில்களை இயக்குவது குறித்து

ஒவ்வொரு மாதமும் முதல் செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறும் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் மாதாந்திர தொழில் வர்த்தக கூட்டம், இந்த கொரோனா ஊரடங்கு காலத்திலும் ZOOM செயலியின் வழியாக கடந்த 05.05.2020 அன்று மாலை 6.30 மணி அளவில் இரண்டு தலைப்புகளில் இந்த கூட்டம் நடத்தப்பட்டது.

ஒன்று, **விவசாயத் தொழில் வாய்ப்புகள்**, மற்றொன்று, **கோவிட்-19 ஊரடங்கிற்கு பிறகு தொழில்களை எவ்வாறு முறையாக இயக்குவது** ஆகிய தலைப்புகளில் இரண்டு சிறப்பு விருந்தினர்களுடன் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக புது டில்லி, Parliament House, Lok Sabha Secretariate, Deputy Director திரு. R. **கணேஷ்** மற்றும் பெங்களூரு, Conscientia Consultancy Pvt. Ltd. Founder and Director திரு. K.V. **ஓம்பிரகாஷ்** ஆகியோர் கலந்த கொண்டு சிறப்புரையாற்றினர். இந்த நிகழ்ச்சியை சேம்பர் நிகழ்ச்சிக்குழு தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் ஏற்பாடு செய்தார். தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் வரவேற்புரையாற்றி கூட்டத்தை துவக்கினார்.

சிறப்பு விருந்தினர் திரு. R. **கணேஷ்** அவர்களை சேம்பர் செயற்குழு உறுப்பினர் Dr. A.R. **கணேசன்** அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

**விவசயாத்தில் உள்ள தொழில் வாய்ப்புகள்** குறித்து சிறப்பு விருந்தினர் திரு. R. **கணேஷ்** அவர்கள் பேசுகையில், கைத்தறி நெசவுத் தொழிலுக்கு உள்ள வாய்ப்பை விட விவசாயத்தொழிலுக்கு இன்று வாய்ப்புகள் கூடி வருகிறது. எந்த சூழலிலும் நமக்கு விவசாயம் கை கொடுக்கும். ஏனெனில் நம் அடிப்படை தேவைகளில் தலையாய ஒன்று. நம் சமூகத்தில் உள்ள முக்கியஸ்தர்கள் பலரிடத்தில் பெரிய அளவில் காலி நிலம் இருந்தாலும் அதில் விவசாய உற்பத்தி செய்பவர்கள் மிகவும் குறைவு. இது போன்ற தருணத்தில் விவசாயத்திற்கு முக்கியத்துவமும் கொடுக்கலாம். இவை எந்த சூழலில் நம்மை காக்கும். அரசாங்கம் விவசயாத்திற்கு மின்சாரம், கடன், டிராக்டர் போன்ற எந்திரம், பயிர்க்கு என பலதரப்பட்ட சலுகைகளை வழங்கி வருகிறது. வரும் 2021ம் அண்டில் விவசாயிகளுக்கான வருமானத்தை இரட்டிப்பாக்க திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயம் சார்ந்த உற்பத்திப்பொருட்களை தயாரிக்க முனைய வேண்டும் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

அடுத்ததாக, சிறப்பு விருந்தினர் திரு. K.V. **ஓம் பிரகாஷ்** அவர்கள் சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. N.S. **பிரேம் குமார்** அவர்கள் அறிமுகம் செய்தார்.

**ஊரடங்கு முடிந்த பிறகு தொழில்களை இயக்குவது குறித்து** சிறப்பு விருந்தினர் திரு. K.V. **ஓம் பிரகாஷ்** அவர்கள் கூறுகையில், கொரோனா வைரஸ் தாக்கத்தால் தொழில்கள் முடங்கிக் கிடக்கின்றன. இந்த நிலையில், நம் தொழிலை மீண்டும் துவக்கும் போது பல்வேறு இன்னல்கள் சந்திக்க வேண்டியிருக்கும். சப்ளையர்களிடத்தில் இருந்து சரக்கு வருவதில் துவங்கி, உற்பத்தி செய்வதில், பணியாட்களை பணிக்கு அமர்த்துதல், நிதி ஆகிய பிரச்சனைகள் சந்திக்க வேண்டியுள்ளது. இதில் மிக முக்கியமானது தொழிலாளர்களை நிர்வகிப்பது. இந்த இக்கட்டான தருணத்தில் தொழிலாளர்கள் முக்கிய இடம் பெருகின்றனர்.

நம் நாட்டின் உள்துறை அமைச்சகம் (MHA) சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அது, நிரந்தர மற்றும் நிரந்தர இல்லாத ஊழியர்களை எந்த ஒரு நிறுவனமும் இந்த காலகட்டத்தில் ஊதியத்தை குறைத்துத் தரவோ, ஊழியர்களை பணியிலிருந்து விலக்கவோ கூடாது என்று கூறியுள்ளது.

இந்த இக்கட்டான சூழலை சமாளிக்க ஊழியர்களின் ஊதியத்தை குறைக்கவோ, நேரத்தை அதிகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ள தொழில் முனைவோர்கள் தாங்களே ஒரு முடிவெடுத்து செயல்படாமல், ஊழியர்களின் ஒப்புதல், தகுந்த வல்லுனர்களின் ஆலோசனையுடன், MHA வழிகாட்டுதலை மீறாமல் செயல்பட வேண்டும்.

தொழிற்சாலைகளை இயக்குவதற்கு முன் தொழிலாளர்கள் குறித்த விபரங்களை, அதாவது ஊரடங்கு காலத்தில் அவர்கள் சென்ற இடம், தொடர்பில் இருந்தவர்கள் போன்ற விபரங்களை சேகரித்துக்கொள்வது நன்று.

MHA வழிகாட்டுதலின்படி கீழ்கண்டவாறு செயல்பட வேண்டும். அதாவது,

ஒவ்வொரு தொழிலாளர்கள் / அலுவலக பணியாளர்ளையும் ஆரோக்ய சேது செயலியில் பதிவு செய்ய வேண்டும். கோவிட் 19க்கான கூட்டு இன்சூரன்ஸ் பாலிசி எடுக்க வேண்டும். நிறுவனத்தில் சானிடைசர் பயன்பாடு, சமூக விலகல், வெப்ப மானி, உள்ளூர் கட்டுப்பாடுகளை பின்பற்றுதல் போன்ற விதி முறைகளை MHA தெரிவித்துள்ளது. இதன்படி நமது நிறுவனங்கள் / தொழிற்சாலைகள் செயல்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. மேலும் பல்வேறு பயனுள்ள தகவல்களை அளித்து தனது உரையை நிறைவு செய்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களின் கேள்விகளுக்கு மிகத்தெளிவாக பதிலளித்தார். நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட திரு. R. **கணேஷ்** மற்றும் திரு. K.V. **ஓம் பிரகாஷ்** அவர்களை நன்றி தெரிவித்துக்கொண்டது.

இறுதியாக சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

SCC & NEXTGEN Jointly presents

SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI & NEXTGEN Connect Collaborate Grow Global Sourashtra Young Entrepreneurs Forum

# LOCKDOWN PERIOD BUSINESS MEETS

## POST RECESSION OPPORTUNITIES



திரு. கோபிநாத் ராமமூர்த்தி

இளைய தொழில் முனைவோர் "NEXTGEN" அமைப்பு, கடந்த 02.05.2020 அன்று மாலை 6.30 அளவில் POST RECESSION OPPORTUNITIES என்ற தலைப்பிலான கூட்டத்தை ZOOM செயலியின் மூலம் நடத்தியது.

இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. **கோபிநாத் ராமமூர்த்தி** BNI Salem -Executive Director, International Trainer அவர்கள் கலந்து கொண்டு பேசினார். இந்த கூட்டத்திற்கு NEXTGEN அமைப்பின் தலைவர் திரு. T.M. **ருபேஷ் பாபு** அவர்கள் தலைமை தாங்கினார். அமைப்பின் பொதுச் செயலாளர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார். சிறப்பு விருந்தினராக திரு. **கோபிநாத் ராமமூர்த்தி** அவர்கள், கொரோனா பாதிப்பிற்கு பிறகு தொழில் வாய்ப்புகள் எவ்வாறு இருக்கும் என்பது பற்றி மிக அருமையாக பேசினார்.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் இந்த கூட்டத்தில் பங்கு கொண்டது. சேம்பர் உறுப்பினர்களும் பலர் திரளாக கலந்து கொண்டு பயன் பெற்றனர். உறுப்பினர்களின் கேள்விகளுக்கு மிக அருமையாக பதிலளித்தார்.

## Impact of COVID 19 on Oil Markets



திரு. வெங்கடேஷ் நாட்டாமை

இளைய தொழில் முனைவோர் "NEXTGEN" அமைப்பு, கடந்த 09.05.2020 அன்று மாலை 6.30 அளவில் Impact of COVID 19 on Oil Markets என்ற தலைப்பிலான கூட்டத்தை ZOOM செயலியின் மூலம் நடத்தியது.

இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. **வெங்கடேஷ் நாட்டாமை** General Manager, Reliance Industries Limited அவர்கள் கலந்து கொண்டு பேசினார். இந்த கூட்டத்திற்கு இளைய தொழில் முனைவோர் அமைப்பின் தலைவர் திரு. T.M. **ருபேஷ் பாபு** அவர்கள் தலைமை தாங்கினார். NEXTGEN அமைப்பின் பொதுச் செயலாளர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார். சிறப்பு விருந்தினராக திரு. **வெங்கடேஷ் நாட்டாமை** அவர்கள், கொரோனா தாக்கத்தால் எண்ணை உற்பத்தி பாதிப்பு விலை வீழ்ச்சி குறித்து மிக அருமையாக விளக்கினார்.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் இந்த கூட்டத்தில் பங்கு கொண்டது. சேம்பர் உறுப்பினர்களும் பலர் திரளாக கலந்து கொண்டு பயன் பெற்றனர். உறுப்பினர்களின் கேள்விகளுக்கு மிக அருமையாக பதிலளித்தார்.

K.G.சீனிவாசன் 9150408082, 9150408081
பள்கார் ஆக்டிங் டிரைவர்ஸ் & டிராவல்ஸ் ஏஜென்ட்

Drivers Rental Cars
Tourister 407 Vans
Real Estates
for video
QR CODE
www.palkaractingdrivers.com

T.K.B.ராஜ்குமார் YP GROUP 9150408081 9150408082

பள்கார்
ப்ராபர்டீஸ் & ரியல் எஸ்டேட் ஏஜென்ஸி
ரியல் எஸ்டேட், டிராவல்ஸ், டிரைவர் சர்வீஸ்
for Banking... G Pay paytm
for Internet... Google facebook YouTube


O.V.K. பாஸ்கரன்
தரமான டைல்ஸ்கள், சரியான விலையில் மன நிறைவுடன் வாங்க...
TRC
ரிஜென்சி டிரேடிங் கம்பெனி
5, பெசன்ட் ரோடு, PTR கல்யாண மகால் பின்புறம்,
சொக்கிகுளம், மதுரை-625 002.
செல் : 73737 21281, 98428 21281, 99449 05051
அனைத்து முன்னணி கம்பெனி டைல்ஸ் & சானிட்டரிவேர்ஸ்

V.K. ஜெயசங்கர்

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care




PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrance Pvt. Ltd



K K Dinakaran

www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831









கொரோனா நோய் தொற்றினால் பொருளாதார பாதிப்பில் சிக்கித்தவிக்கும் நம் சமூக மக்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்குவதற்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள், "SSS 91 Batch" உடன் இணைந்து ஸௌராஷ்ட்ரா ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் கடந்த 17.05.2020 அன்று தமிழக சட்டமன்ற உறுப்பினர் திரு. S.S. **சரவணன்** அவர்கள் முன்னிலையில் நிவாரணப்பொருட்களை வழங்கியது.









# கொரோனா நிவாரண நிதி



சேம்பர் நிர்வாகிகள் மதுரை மாவட்ட ஆட்சியரை சந்தித்து நிதி வழங்கியபோது

கொரோனா வைரஸ் நோய் தடுப்ப நடவடிக்கைக்கு மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.டி.ஜி.வினய்,இ.ஆ.ப., அவர்களிடம் சௌராஷ்ட்ரா தொழில் சங்கம் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக இரண்டாவது தவணையாக ரூ.1 லட்சத்திற்கான காசோலையினை (13-5-2020) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கினார்கள்..

## Relief measures hailed

STAFF REPORTER

MADURAI

The Sourashtra Chamber of Commerce president Kumaran B. Jaghuva in a press release welcomed the Union Finance Minister Nirmala Sitharaman's relief measures announced through a media conference to the industry on Wednesday.

He said that the announcements would mean a lot to the tiny, small and medium sectors in the COVID-19 pandemic times. The Centre should also consider giving similar relief to exporters, startups and women entrepreneurs.

— தி இந்து (ஆ)

## நாளிதழ்களில் சேம்பர் அறிக்கை வெளியீடு

### பிரதமரின் திட்டங்களை வரவேற்கிறோம்



கொரோனா பாதிப்பில் பெருமளவு தொழில்கள் பாதிக்கப்பட்டதை கருத்தில் கொண்டு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு அறிவித்த திட்டங்களை வரவேற்கிறோம்.

சிறு, குறுந்தொழில் களுக்கு பிணையின்றி ரூ.3 லட்சம் கோடிக்கு கடன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு முதலீட்டு வரம்பு உயர்வு, பிணையின்றி பெற்ற கடனை திருப்பி செலுத்த 4 ஆண்டுகள் அவகாசம் போன்ற திட்டங்கள் பயனுள்ளதாக இருக்கும்.

நலிவடைந்த தொழிலாளர்களுக்கு கடன் வசதி, வருங்கால வைப்பு நிதியை மூன்று மாதங்களுக்கு அரசு செலுத்துவது ஆறுதலான விஷயம். ஏற்றுமதியாளர்கள், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், பெண் தொழில் முனைவோருக்கு பயன் தரும் வகையிலான அறிவிப்புகள் வெளிவரும் என நம்புகிறோம். தொழில்களுக்கான வங்கி கடன் வட்டியை மூன்று மாதங்கள் தள்ளுபடி செய்வார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்.

— தினமலர்

## நிதி அமைச்சரின் அறிவிப்புகளுக்கு சௌராஷ்டிரா வர்த்தக சபை வரவேற்பு

**மதுரை,மே 13:** தொழில் நிறுவனங்களுக்கான சலுகைகள் தொடர்பாக மத்திய நிதி அமைச்சரின் அறிவிப்புகளுக்கு சௌராஷ்டிரா வர்த்தக சபை வரவேற்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வர்த்தக சபையின் தலைவர் குமரன் பி.ஜகுவா வெளியிட்டுள்ள செய்தி: கரோனா தீநுண்மி தொற்று தாக்கம் காரணமாக ஏராளமான தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதைக் கருத்தில் கொண்டு தொழில் நிறுவனங்களுக்கு கைகொடுக்கும் வகையில் மத்திய நிதி அமைச்சரின் அறிவிப்புகள் உள்ளன.

சிறு, குறுந்தொழில் நிறுவனங்களுக்கு பிணையின்றி ரூ.3 லட்சம் கோடி அளவுக்கு கடனுதவி, முதலீட்டு வரம்பு உயர்வு, கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த 4 ஆண்டுகள் அவகாசம், நலிவடைந்த தொழில்களுக்கும் கடன் வசதி, வருங்கால வைப்புநிதி பங்களிப்புத் தொகையை மேலும் 3 மாதங்களுக்கு அரசே ஏற்றுக் கொள்வது உள்ளிட்ட அறிவிப்புகள் வரவேற்புக்குரியவை.

ஏற்றுமதியாளர்கள், புதிய தொழில் நிறுவனங்கள், பெண் தொழில் முனைவோருக்கு எவ்வித அறிவிப்பும் இல்லாதது வருத்தம் அளிக்கிறது. இருப்பினும் அதற்கான அறிவிப்பு விரைவில் வரும் என எதிர்பார்க்கிறோம். தொழில்களுக்கான வங்கிக் கடன் வட்டியை குறைத்து 3 மாதங்களுக்கு தள்ளுபடி அறிவிப்பையும் எதிர்பார்க்கிறோம் என்றார்.

— தினமணி

தினமணி Thu, 14 May 2020 https://epaper.dinamani.com/c/51880853

- அங்கத்தினர்களிடமிருந்து பெறப்பட்ட கொரோனா நிவாரண நிதியை (மத்திய மற்றும் மாநில அரசுக்கு) கடந்த 13.05.2020 அன்று மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. டி.ஜி. **வினய்** அவர்களிடம் நமது சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து வழங்கினர்.
- 
- மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு நிர்மலா சீதாராமன் அவர்கள், கொரோனா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கான கடன் சலுகைகளை வரவேற்கிறது. இதனை 14.05.2020 அன்று செய்தித்தாள்களில் வெளியிட்டுள்ளோம்.
- 

இருமும் போதும் தும்மும் போதும் கைக்குட்டையால் வாயை நன்றாக முடிக்கொள்ள வேண்டும்.

*Feeling Good Is Second Nature*

# Lissy®

- Bra
- Panty
- Slips

*All Women Love*

Feeling Second Nature

*Manufacturer:*

**VGP APPARELS**

Saikrupa Industrial Estate (Dinbandu)
Shop No: 10, Near Shivam Wafers, Opp. P.L. Lokhande Marg,
Chembur(W), Mumbai - 400 089
Ph: 022 - 2525234, Cell: 89760 10072

**ஜெய்கங்கா அப்பேரல்ஸ்**
279, கீழ மாசி வீதி
விளக்குத்தூண் அருகில்
மதுரை – 1
செல்: 94430 21910

**P.G. India**
50, தெற்கு மாசி வீதி
லலிதா ஜுவல்லரில் எதிரில்
மதுரை – 1
செல்: 84382 71065

**வெங்கடேஸ்வரா டெக்ஸ் & கிட்ஸ் வியர்**
32, மஹால் 5வது தெரு
மதுரை – 1
செல்: 99650 40168

## சிறு, குறு தொழில்களுக்கு

# மத்திய அரசின் கொரோனா பேரிடர் கடனுதவி

பாரதப் பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்கள் இருபது லட்சம் கோடிக்கான சுயசார்பு பாரதம் என்ற பெயரின் மூலம் சிறப்பு சலுகைகளை அறிவிக்கப்போவதாக கடந்த 12.05.2020 அன்று தெரிவித்ததை தொடர்ந்து 13.05.2020 அன்று மாலை 4 மணி அளவில் மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு நிர்மலா சீதாராமன் அவர்கள் சிறப்பு சலுகைகளை அறிவித்தார். பல்வேறு துறைகளுக்கான சலுகைகள் அறிவிக்கப்பட்டன. அதில் முதல் ஆறு அறிவிப்புகள் தொழில் துறையினரின் நலனை கருத்தில் கொண்டு அமைந்திருந்தது. அந்த ஆறு அறிவிப்புகளை தற்போது காணலாம்.

1. ஒரு நிறுவனம் பெற்றுள்ள மொத்த கடனில் 20 சதவீதம் சிறப்புக் கடனாக வழங்கப்படுகிறது. பிணையமாக பத்திரங்கள் எதுவும் தேவையில்லை. நான்கு ஆண்டுகளில் இந்த கடனை திருப்பி செலுத்தலாம். அதில் முதல் வருடத்தில் அசலை செலுத்த வேண்டியதில்லை. அக்டோபர் 31ம் தேதி வரை இந்த கடன் வசதியை பெறலாம்.

2. நலிவடைந்த சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 20 ஆயிரம் கோடி ரூபாய் கூடுதல் கடனாக வழங்கப்படும். உத்தரவாதம் அளிப்பதற்காக சிறப்பாக ஒரு நிதி ஒதுக்கப்படும். வாராக் கடனில் உள்ள நிறுவனங்களும் இதைப் பெறலாம்.

3. சிறு தொழில் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியை விரிவுபடுத்த புதிய கடன் வசதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி ரூ. 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள நிதித் தொகுப்பு உருவாக்கப்படும். இதன் மூலம் ரூ. 50 ஆயிரம் கோடி ரூபாய் வரை முதலீடுகள் இந்தத் துறையினருக்கு கிடைக்கும்.

4. சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் என்பதற்கான வரையறை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. முன்பு முதலீட்டை மையப்படுத்தியே மேற்படி மூன்று பிரிவுகள் அமைந்திருந்தது. தற்போது அதனை திருத்தி, முதலீட்டுடன், விற்றுமுதலும் சேர்க்கப்படுகிறது. அதன்படி, ரூ. 1 கோடி முதலீடு, ரூ. 5 கோடி விற்றுமுதல் கொண்டவை குறு நிறுவனங்கள் என்றும், ரூ. 10 கோடி முதலீடு, ரூ. 50 கோடி விற்றுமுதல் கொண்டவை சிறு நிறுவனங்கள் என்றும், ரூ. 20 கோடி முதலீடு, ரூ. 100 கோடி விற்றுமுதல் கொண்டவை நடுத்தர நிறுவனங்கள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5. 200 கோடி ரூபாய் வரையிலான அரசின் பணிகளுக்கு இனி சர்வதேச அளவில் டெண்டர் கோரப்படாது. இதன் மூலம் சிறு தொழில் நிறுவனங்கள் பெருமளவு பயன் பெற முடியும்.

6. சிறு, குறு நிறுவனங்கள் தங்கள் பொருட்களை இ-மார்க்கெட்டிங் எனப்படும் ஆன்லைன் வாயிலாக விற்பனை செய்ய வாய்ப்பு வழங்கப்படும்.

**சுயசார்பு என்பது தனிமைப்படுத்திக் கொள்வதல்ல:**

கொரோனா நோய்தொற்று இந்தியாவுக்கு வாய்ப்பாகவும் அமைந்துள்ளது. இந்திய சுயசார்புடன் திகழ முடியும் என்று பிரதமர் கூறியதை மேற்கோள் காட்டி பேசிய நிர்மலா சீதாராமன், பிரதமர் கூறியிருப்பதை வைத்து இந்தியா தன்னைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறது என்றோ, சுயசார்பு என்பது பிற நாடுகளில் இருந்து நம்மை தனிமைப்படுத்திக் கொள்வது என்றோ அர்த்தப்படுத்திக் கொள்ளக்கூடாது. இந்தியா தன்னையும் வலுப்படுத்திக் கொண்டு உலகுக்கும் உதவ முடியும் என்பதை பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார். என்றார்.

அரசு நிலுவை வைத்துள்ள அனைத்து தொகைகளும் 45 நாட்களுக்குள் அளிக்கப்படும் என்றும் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் தெரிவித்தார்.

இவை தவிர, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியாக (பி.எஃப்) இப்போது நிறுவனங்கள் சார்பில் 12% பங்களிப்பும், தொழிலாளர்களின் சம்பளத்தில் இருந்து 12%பிடித்தமும் செய்யப்பட்டு செலுத்தப்படுகிறது. இனி அடுத்த 3 மாதங்களுக்கு இந்த இரு நிலைகளிலும் 10%மட்டுமே பிடித்தம் செய்யப்படும். இதன் மூலம் நிறுவனங்களுக்கு செலவு குறையும்.

முத்ரா சிசு திட்டத்தின் கீழ் சிறு வியாபாரிகளுக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது. தற்போது மூன்று மாத தவணை நிறுத்தக் காலத்துக்குப்பின் இந்தக்கடனை முறையாக செலுத்துவோருக்கு 2% வட்டி குறைப்பு சலுகை அளிக்கப்படும்.

– இதழ்குழு






அனைவரும் பயன்படுத்தக்கூடிய கதவின் கைப்பிடி, தொலைபேசி போன்ற பொருட்களை கிருமி நாசினி கொண்டு அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும்.

# புதிய சிந்தனைகள்

## COVID 19 - Lockdown



– கே.கே.ஜி. பிரபாகரன், முன்னாள் தலைவர், ஸௌ. சேம்பர்



கொரோனா – கோவிட் 19 முக்கிய விவாதப் பொருள்.

**“கொரோனா வைரஸ் யுத்தம்”.**

“மக்கள் ஒருவரை ஒருவர் அன்னியோன்யமாக பழக வேண்டும்; சேர்ந்து இருக்க வேண்டும்; கை குலுக்க வேண்டும்; ஒருவரை ஒருவர் தழுவிக் கொள்ள வேண்டும்”

– இது மனித இயல்பு.

கொரோனா வைரஸ் யுத்தம் இந்த மனித இயல்பை உடைத்தெறிந்துள்ளது.

விலகியிரு, விழித்திரு, தனித்திரு – இதுதான் இன்றைய ஸ்லோகம்.

மனிதர் ஒருவரை ஒருவர் சந்தேகக்கண் கொண்டு பார்க்கின்றோம். இவரிடம் கொரோனா வைரஸ் தொற்று இருக்குமா? என்ற சந்தேகப்பார்வை ஒவ்வொருவர் மனதில் அலை பாய்கிறது.

நம் பாரம்பரிய விருந்தோம்பலை நினைவுகூறும் வகையில் கொரோனா வைரஸ் நம்மை புதுப்பித்து உள்ளது. இந்த பழக்க வழக்க மாற்றங்களை மக்கள் எது வரை நடைமுறையில் வைத்திருப்பார்கள் என்று காலம் தான் பதில் சொல்லும்.

இவ்வளவு பிரச்சனைகள், சிரமங்கள். ஆனால் நம் **ஒவ்வொரு வணிக நிறுவனங்களுக்கு சில குறிப்பிட்ட கடமைகள் உள்ளன. பொறுப்புகள் உள்ளன.**

நம் ஒவ்வொருவருக்கும்.

- இரத்த சம்பந்தப்பட்ட குடும்பம் உள்ளது.
- நம் நிறுவனத்தை நம்பி வேலைப்பார்க்கும் வேலையாட்கள் உள்ளனர்.
- நம் நிறுவனத்திற்கான சப்ளையர்கள் / வாடிக்கையாளர்கள் உள்ளனர்.

நிறுவனத்தின் தலைவர் என்ற முறையில் நம் அணுகுமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டிய தருணம். இவை கொரோனா கற்றுத்தந்த பாடங்கள் எனலாம். இதன்கீழ் தரப்படும் ஆலோசனைகள் / அறிவுரைகள் ஏற்க்கத்தக்கதாக இருக்கலாம் அல்லது மாற்றம் தேவைப்பட்டலாம். இது ஒரு வழி காட்டியாக எடுத்துக்கொள்ளுங்கள்.

முதலாவது ஆலோசனை: **குடும்பம்: FAMILY** - New defintion for **TRADE:**

குடும்பம் என்ற சொல்லின் தாத்பரியம் மாறிவிட்டது. ஒரு வணிகத்தை நடத்துபவர் முன்பு தன் குடும்பம் என்றால் இரத்த உறவு சம்பந்தப்பட்ட குடும்ப உறுப்பினர்களையே சாரும். கொரோனா வைரஸ் யுத்தத்தால் வணிக நிறுவனத்தில் அவருடைய வணிக வேலையாட்கள் அவர்கள் குடும்ப உறுப்பினர்களையும் சேர்க்கும் கட்டாயாத்தில் தள்ளப்பட்டிருக்கிறோம்.

ஒரு வேலையாள் அல்லது அவருடைய குடும்ப உறுப்பினருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டால், நிறுவனம் தற்காலிகமான நிறுத்தத்தை சந்திக்க நேரிடும். ஆதலால் மனதளவில் **குடும்பம்** என்ற சொல்லுக்கு கொரோனா வைரஸ் யுத்தத்தால் சற்று வளர்ந்து பெரிதாகி உள்ளது. இதை மனதளவில் பதிவு செய்து கொள்ள வேண்டிய தருணம்.

இரண்டாவது ஆலோசனை: **நிறுவன பணபரிமாற்றநிலை – Funds flow of Trade:**

கொரோனா வைரஸ் யுத்தம் – நம் குடும்ப வரவு செலவுகளுக்கு சவால் தந்து உள்ளன. வருமானம் எதுவும் இல்லாமல்;

- இரத்த சம்பந்தப்பட்ட செலவுகளை செய்ய வேண்டும்.
- வேலையாட்களின் சம்பளம் எப்படித்தருவது – ஒரு மாதம் வேலையே பார்க்கவில்லை. ஆனால் சம்பளம் தராமல் இருக்க முடியாது. அவர்களும் நம் குடும்ப உறுப்பினர்கள் தான். அதை எப்படி நிறுவனம் சமாளிப்பது?. நிறுவனத்தின் தார்மிக உரிமை இது.






65 வயதிற்கு மேற்பட்டவர்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது.

- நம் மூலப்பொருட்கள் சப்ளை செய்பவர்களுக்கு பணப்பட்டுவாடா
- நம் வாடிக்கையாளர்களிடம் இருந்து எப்படி பணத்தைப் பெறுவது; சிரமம் என்பது நம் நிறுவனத்திற்கும் வாடிக்கையாளர்களுக்கும் உள்ள ஒரே சவால்.
- இது தவிர EMI, வங்கி வட்டி போன்ற சவால்கள். நிறுவன பணப்பரிமாற்ற நிலையை அறிந்து செயல்படுத்த வேண்டிய தருணம்.

மூன்றாவது ஆலோசனை - **ரொக்கக் கையிருப்பு - Reserve Cash in Hand:**

நிறுவனப் பணப்பரிமாற்ற நிலையை மனதில் நிறுத்தி, நம்மிடம், நம் நிறுவனத்திடம் கையிருப்பு Cash Reserve எப்படி நிலை நிறுத்தலாம் - இது ஒரு முக்கியமான கேள்வி?.

கொரோனா வைரஸ் யுத்தம் நம் குடும்ப கையிருப்பை, நம் வேலையாட்களின் கையிருப்பை எப்படி கையாள்வது என்ற ஒரு பெரிய சவாலை கொடுத்துள்ளது. நிறுவன கையிருப்பை அதிகரிக்க;

- அரசு வழங்கும் உதவிகளை பெற முயற்சிக்கலாம் - இது தேவைப்பட்ட நேரத்தில் நம் முன்கிடைக்காது.
- வங்கிகள் வழங்கும் குறைந்த வட்டிக்கடன் - இது முயற்சித்தால் நிச்சயமாக நமக்கு கிட்டும்.
- EMI கட்டுவது தள்ளிப்போட்டு கையில் பணத்தை இருப்பாக வைத்துக்கொள்ளலாம்.
- நம்மிடம் உள்ள தங்க நகைகள் வைத்து நகைக்கடன் வாங்கலாம்.
- நம் LIC பாலிசிகள் வைத்து கடன் வாங்கலாம்.
- நம்மிடம் கிரெடிட் கார்டு கொண்டும் கடன் எடுக்கலாம்.

மேற்கூறிய வகைகளில் (Cash Reserve) கையிருப்பை அதிகரிக்க நிறுவனமும், அதன் வேலையாட்களும் சமயோசிதமாக உபயோகித்து கொரோனா வைரஸ் யுத்தத்தில் போர் வீரனாக இருந்து போர் புரிவோம்! ஒவ்வொருவரும் வெல்வோம்.

## GST Announcements

The Central Board of Indirect Taxes and Customs (CBIC) had extended the due date for filing GSTR-9 (Annual Return) for the Financial Year 2018-19 to be extended till the 30th of September 2020. The GST Council in its 39th meeting, had extended the due date for filing GSTR-9 (Annual Return) and GSTR - 9C (Reconciliation Statement) for the Financial Year 2018-19 to 30th June 2020.

**Notification No: 41/2020** - Central Tax dated 05.05.2020. CBIC extended the due date for furnishing of Annual return (GSTR-9 & GSTR-9C) for the financial year 2018-19 till the 30th September 2020.

**Notification No: 38/2020** - Central tax dated 05.05.2020. Any Person liable to file Nil GSTR-3B can be submit the same by SMS (Short Message Service) and the said return shall be verified by OTP sent to the registered mobile number.

Allow all assesees to claim ITC in GST TRAN-1 by 30.06.2020

**Notification No: 40/2020** - Central Tax issued to extend the validity of e-way bill till 31.05.2020 for all those e-way bills which were generated on or before 24.03.2020 and had expiry between the period from 20.03.2020 to 15.04.2020

*- Division Bench of Delhi High Court.*
*- N.S. Prem Kumar, EC Member, SCC*

## COVID-19 RELIEF *-Other Announcements*

**Relief to Contractors:** All central agencies like Railways, Ministry of Road Transport and Highways and CPWD will give extension of up to 6 months for completion of contractual obligations, including in respect of EPC and concession agreements

**Relief to Real Estate Projects:** State Governmentsare being advised to invoke the Force Majeure clause under RERA. The registration and completion date for all registered projects will be extended up to 6 months and may be further extended by another 3 months based on the State's situation. Various statutory compliances under RERA will also be extended concurrently.

**Tax Relief to Business:** The pending income tax refunds to charitable trusts and non-corporate businesses and professions including proprietorship, partnership and LLPs and cooperatives shall be issued immediately.

**Tax related measures:** Reduction in Rates of 'Tax Deduction at Source' and 'Tax Collected at Source" - The TDS rates for all non-salaried payment to residents, and tax collected at source rate will be reduced by 25 percent of the specified rates for the remaining period of FY 20-21.This will provided liquidity to the tune of Rs 50,000 Crore. The due date of all Income Tax Returns for Assessment Year 2020-21 will be extended to 30 November, 2020. Similarly, tax audit due date will be extended to 31 October 2020. The date for making payment without additional amount under the "Vivad Se Vishwas" scheme will be extended to 31 December, 2020.

*source: taxmann.com*




காய்ச்சல், இருமல், சளி, வறண்ட தொண்டை இருநாட்களுக்கு மேல் இருந்தால் கண்டிப்பாக மருத்துவரை அணுகவும்.



https://www.youtube.com/watch?v=lx1LDfy_AEE&feature=youtu.be

## குறு, சிறு தொழில் மேம்பாட்டுக்கு புதிய இணையதளம் தொடக்கம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை அமைச்சகம் www.champions.gov.in என்ற இணையதளத்தை தொடங்கியுள்ளது.

இது தொழில்நுட்ப அடிப்படையிலான கட்டுப்பாட்டு அறை மற்றும் மேலாண்மை நடைமுறையாக இருக்கும். நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த நடைமுறை, தேசிய மற்றும் உலகளாவிய சாம்பியன்ஸ் என்ற நிலையை நோக்கிய நகர்வில் குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் துறை அமைச்சகத்துக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

**சாம்பியன்ஸ்** Champions என்பது உருவாக்கம் மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நவீன நடைமுறைகளை இணக்கத்துடன் பயன்படுத்தி தேசத்தை வலுப்படுத்துவது என்பதைக் குறிப்பதாக இருக்கிறது. எனவே இந்த நடைமுறை சாம்பியன்ஸ் என்று குறிப்பிடப்படுகிறது.



சிறிய தொழில் பிரிவுகளின் குறைகளைத் தீர்த்து வைத்து, ஊக்குவிப்பு, ஆதரவு, உதவிகள் அளித்து, கைபிடித்துத் தூக்கிவிடும் செயல்பாடுகள் மூலம் அவற்றைப் பெரிய நிறுவனங்களாக ஆக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு இந்த இணையதளம் செயல்படும்.

குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் துறை அமைச்சகம் கையாளும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒரே இடத்தில் தீர்வு காணும் இணையதளமாக இது இருக்கும்.

## வரி செலுத்துவோர் வசதிக்கு வாட்ஸ்ஆப் எண் அறிமுகம்

கொரோன பெருந்தொற்று காரணமாக தொழில் வர்த்தகத் துறையினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நீக்குவதற்காக, வரி செலுத்துபவர்களுக்கு கூடுதல் தகவல் தொடர்பு சேனலாக தனிப்பட்ட வாட்ஸ்ஆப் எண் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.




தமிழ்நாடு மாநிலம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்த ஜி.எஸ்.டி-ன் மத்திய அதிகார வரம்பிற்குட்பட்ட வரி செலுத்துபவர்களும், பொதுமக்களும் இந்த வாட்ஸ் ஆப் வசதியை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்களுக்கான அதிகார வரம்பிற்குட்பட்ட அலுவலகங்களை நேரில் சென்று அணுகாமலேயே வாட்ஸ் ஆப் எண் மூலமாகவே, தங்களுக்குள்ள குறைகளுக்கும், வினாக்களுக்கும் விரைவில் தீர்வு காண முடியும்.

வாட்ஸ் ஆப் எண் 94444 02480 மூலம் செய்திகளை மட்டுமே அனுப்பமுடியும். அழைப்பு விடுத்து பேசும் வசதி நீக்கப்பட்டிருக்கும்.

இந்த அலுவலகத்தில் உள்ள ஒரு அதிகாரி ஒற்றைச்சாளர மைய அதிகாரியாகச் செயலாற்றி, அந்தந்த அதிகார வரம்பிற்குட்பட்ட அதிகாரியிடமிருந்து பதில்களைப் பெற்று வாட்ஸ் ஆப் மூலம் பதில் அனுப்புவார்.

அனைத்து தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளும், கூட்டமைப்புகளும் இத்துறையின் இப்புதிய முயற்சி குறித்து, தங்கள் அனைத்து உறுப்பினர்களுக்கும் தகவல் அளிக்க வேண்டும் என்றும், அவர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

*- N.S. Prem Kumar,*




கைகளை அடிக்கடி சோப்பு தேய்த்து நன்றாக கழுவ வேண்டும்.
கைகளின் பின்பக்கம், நக இடுக்குகளிலும் கழுவ வேண்டும்.



https://www.youtube.com/watch?v=Ix1LDfy_AEE&feature=youtu.be



# நான் நெகிழி பேசுகிறேன்

-B.S. ஜெனார்த்தனன்

1862ல் ஆரம்பமான என் பயணம் காலம் செல்ல செல்ல 1907ல் சில மாற்றங்களுடனும் 1933-ல் இருந்து இன்று வரை, ஏன்; இனி வரும் காலங்களிலும் நான் பிரபலமாகவே இருப்பேன்.

எந்த செயலுக்காக என்னை கண்டறிந்தார்களோ எனக்கு தெரியாது. இந்த பூமி உள்ளவரை நான் வாழ வேண்டும். உங்களுக்கும் பயன் தர வேண்டும் என தணியாத தாகம் எனக்கு.

ஆனால் கடந்த 30 ஆண்டுகளாக அனைத்து செயல்களிலும் என்னை தாங்கள் பயன்படுத்துவது என்னை மிகவும் வேதனை அடைய செய்து வருகிறது. நான் நிரந்தரமானவன் எந்த நிலையிலும் எனக்கு அழிவில்லை. என்னை உருமாற முடியாத நிலையில் படைப்பதால் தீமை உங்களுக்கு மட்டுமல்ல எனக்கும் தான். ஏனெனில் என்னை பயன்படுத்த தாங்கள் இருக்கமாட்டீர்கள். அந்த நிலை எனக்கு வேண்டாமென நினைக்கிறேன்.

என்னை ஒரு பொருளாக உருவாக்கும் போது அந்த பொருளாகிய என்னை மறுபடியும் வேறு உருவத்தில் மாற்றம் செய்யும் நிலையில் உருவாக்குங்கள். நான் எத்தனை முறை வேண்டுமானாலும் அக்னியில் உறைந்து உருமாறி புத்துயிர் பெற்று வர காத்திருக்கிறேன் உங்களுக்காக. படைப்பவன் இறைவன் என்றால் என்னை படைப்பவர்களாகிய தாங்களும் எனக்கு இறைவனே.

என்னை நன்றாகப் படைத்து, வரும் காலம் பசுமையான காலம் என சொல்லும் வண்ணம் செய்யுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். மக்கள் கேட்கிறார்கள், வியாபாரிகள் கேட்கிறார்கள் அதனால் என்னை மறு சுழற்சி செய்ய முடியாத நிலையில் உருவாக்குகிறோம் என்று கூறாதீர்கள். என் மீது பழியும் போடாதீர்கள். பிறகு நல்ல நிலையில் என்னை உருவாக்க நீங்கள் மிகுந்த சிரமம் மேற்கொள்ள வேண்டிய நிலை வந்தாலும் வரலாம்.

பூமியில் நல்ல வண்ணம் வாழ என்னை மறுசுழற்சி செய்யும் பொருளாக மாற்றுவது படைப்பவர்களாகிய உங்கள் கையில்... மறு சுழற்சி செய்ய முடியாத நிலையில் என்னை உருவாக்கி உங்கள் சந்ததிகளுக்கு மலட்டு பூமியை விட்டு சென்றுவிடாதீர்கள். என்றும் உங்களுக்கு பயன்தர நினைக்கும்

- உங்கள் நெகிழி/பிளாஸ்டிக்.

# அலுவலகத்தில் கடைபிடிக்க வேண்டிய கொரோனா வழிமுறைகள்





பல நாட்களுக்குப்பிறகு அரசு தற்போது தொழில்துறை நிறுவனங்கள் சில கட்டுப்பாடுகளுடன் இயங்கலாம் என்று அறிவித்துள்ளது. அதனை ஏற்று பல்வேறு நிறுவனங்கள் தொழிற்சாலைகள் அரசின் கட்டுப்பாடுகளுடன் செயல்பட தொடங்கியுள்ளன.


கொரோனா பாதிப்பு காரணமாக கடந்த ஒன்றரை மாதங்கள் வீட்டில் தனிமையைக் கடைபிடித்து பாதுகாப்புடன் நாம் அனைவரும் இருந்து வந்தோம், அதே சமயத்தில் இந்த கால இடைவெளியில் பொருளாதார பாதிப்பும் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதனை அவசியம் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தின் காரணமாக வெளியே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆபத்தான தருணம் என்றாலும் சில பாதுகப்பு நடவடிக்கையுடன் நாம் செயல்பட வேண்டும்.

அதனடிப்படையில், உங்கள் நிறுவனத்தை இயக்கும் போது கீழ்கண்ட பாதுகாப்பு நடவடிக்கையுடன் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.


- சானிட்டைசரில் கைகழுவிய பின்னரே உள்ளே அனுமதியுங்கள்.
- கைரேகை வருகைப் பதிவு முறையை தகுந்த மாற்றங்களோடு பயன்படுத்துங்கள்.
- அலுவலகத்திற்கு வருபவர்களை வெப்பமானி மூலம் காய்ச்சல் உள்ளதா? என்று பரிசோதனை செய்ய வேண்டும்.
- அறைக்குள் நுழைய இழுக்கும் கதவுகளை தவிர்க்கலாம் அல்லது முழுங்கையைப் பயன்படுத்தி திறக்கலாம்.
- அலுவலகத்தில் நிறைய கதவுகள் இருந்தால் தகுந்த மாற்றங்கள் செய்யலாம்.
- உங்கள் நிறுவத்தில் சமூக இடைவெளியுடன் இருக்கைகளை அமையுங்கள்.
- மணிக்கு ஒரு முறை கிருமி நாசினி கொண்டு அலுவலகத்தை சுத்தப்படுத்துங்கள்.
- பணிபுரியும் போது முகக்கவசம் அணியுங்கள்.
- அலுவலகத்தில் கூட்டங்களை நடத்தும்போது இடைவெளியை பின்பற்றுங்கள்.

- கீதர்குழு



PG India
Lilly Inskirts (100 plus colours available)
& Nighties manufacturers
50.South Masi St,Madurai-1.
(M)8072639441,0452-4963232
for online shopping visit: https://www.pgindia.in



P.R.CHANDRASEKARAN P.C.MYTHILI

வெளியே செல்லும்போது மற்றவர்களிடம் இருந்து குறைந்தது 3 முதல் 6 தூரம் வரை தள்ளி இருப்பது நல்லது.

## Penalty for Fake Entry, etc., in Books of Account

### Combined Analysis of Section 271AAD of Income Tax Act and Section 122(1A) of CGST ACT

| Situation | Section 271AAD of the Income Tax Act, 1961 | Section 122(1A) of the CGST, 2017 |
|---|---|---|
| Supply of goods or services or both without issue of any invoice. | Penalty under clause (*ii*) of section 271AAD (1)<br><br>**Note:** Only supplier shall be liable | Penalty under section 122(1A)<br><br>[Transaction covered under clause (*i*) of Section 122(1)]<br><br>**Note:** Only supplier shall be liable |
| Supply of goods or services or both with issuance of false or incorrect invoice. | Penalty under clause (*i*) of section 271AAD (1)<br><br>[Covered under point (*a*) of *Explanation* to section 271AAD]<br><br>**Note:** Both supplier & recipient shall be liable | Penalty under section 122(1A)<br><br>[Transaction covered under clause (*i*) of Section 122(1)]<br><br>**Note:** Both supplier & recipient shall be liable |
| Invoice issued or received without actual supply or receipt of goods or services or both. | Penalty under clause (*i*) of section 271AAD (1)<br><br>[Covered under point (*b*) of *Explanation* to section 271AAD]<br><br>**Note:** Both supplier & recipient shall be liable | Penalty under section 122(1A)<br><br>**Note:** Supplier shall be liable under clause (*ii*) of Section 122(1)<br><br>**Note:** Recipient shall be liable under clause (*vii*) of Section 122(1) |
| Invoice in respect of supply or receipt of goods or services or both to or from a person who does not exist. | Penalty under clause (*i*) of section 271AAD (1)<br><br>[Covered under point (*c*) of *Explanation* to section 271AAD]<br><br>**Note:** Person who exist shall be liable to pay | Penalty under section 122(1A)<br><br>[Transaction covered under clause (*ii*) of Section 122(1)]<br><br>**Note:** Person who exist shall be liable to pay |

Source: www.taxmann.com

**Sowndarya Traders**

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

*Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary*



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# கொரோனா காலத்திலும் தங்கம் விலை உயர்வுக்கு காரணம்

- இதழ்க்குழு

உலக நாடுகள் பெரும்பாலும் ஊரடங்கைக் கடைப்பிடித்து வரும் நிலையிலும் தங்கத்தின் விலை உயர்வைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. உலகம் முழுவதும் 40 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் தொழிற்சாலைகள், வணிக வளாகங்கள், ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவை தடைபட்டுள்ளதால் உலகம் முழுவதும் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கத் தொடங்கியுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாடு அமைப்பான (ஒசிஇடி) எதிர்வரும் நாட்களில் உலகம் முழுவதும் உற்பத்தித் துறை இருபது சதவீதம் முதல் இருபத்து ஐந்து சதவீதம் வரையிலான சரிவைச் சந்திக்கும் எனக் கூறியுள்ளனர். ஆனால் இது போன்ற இக்கட்டான சூழ்நிலையிலும் 24 காரட் சுத்தத் தங்கத்தின் மீதான முதலீடு அதிகரித்தே காணப்படுகிறது.

இந்தக் கொரோனா காலத்திலும் தங்கத்தின் மீதான முதலீடு அதிகரித்துள்ளதும் அதனைத் தொடர்ந்து தங்க நகைகளின் விற்பனை உயர்ந்திருப்பது கவனிக்க வேண்டிய விஷயமாகும். இதற்கு முக்கியக்காரணம் சர்வதேச முதலீட்டாளர்கள் இந்தக் கொரோனா காலத்தில் மற்ற துறைகளில் முதலீடு செய்வதைவிடத் தங்கத்தில் முதலீடு செய்து அதனால் எதிர்காலத்தில் அதிக லாபத்தை ஈட்டித்தர முடியும் என்பதால்தான். பொருளாதார நெருக்கடி மிகுந்த காலங்களில் தங்கம் சிறந்த முதலீடாகும்.

எதிர்வரும் நாட்களில் பல பரிவர்த்தனைகளுக்குத் தங்கத்தின் கையிருப்பு பொருளாதார முன்னெற்றத்திற்கு உதவியாக இருக்கப்போகிறது. இதன் காரணமாகத்தான் சர்வதேச அளவில் இந்த வருடத்தில் மட்டும் தங்கத்தின் மீதான முதலீடு 5.3 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்நிலையில் உலக தங்க கவுன்சில் பிப்ரவரி மாதம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி இந்திய ரிசர்வு வங்கி நீண்ட இடைவெளிக்குப் பிறகு தங்கத்தை வாங்கியுள்ளது.

இதன் காரணமாக ரிசர்வ் வங்கியில் தங்கத்தின் இருப்பு மட்டும் 633.1 டன்னாக உயர்ந்துள்ளது. உலக அளவில் தங்கம் இருப்பு வைத்துள்ள நாடுகளில் பட்டியலில் இந்தியா 10வது இடத்தில் உள்ளது. பலவீனமான பொருளாதார காலத்தில் உற்பத்தியைப் பெருக்கவும் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவரவும் தங்கத்தின் மீதான முதலீட்டுத் தேவை அதிகரித்துள்ளது. மத்திய வங்கி மற்றும் முதலீட்டாளர்கள் தங்கத்தில் முதலீடு செய்வதுபோல் சாதாரண பொதுமக்கள் தங்களுடைய சிறு சேமிப்பைத் தங்க நகைகள், தங்கக் காசுகளில் முதலீடு செய்துள்ளனர்



## Taxation of Cash Transactions


**11.2 Small traders should adopt cashless/digital modes of receiving and making payments to reduce compliance burden**

- The provisions of new Explanation 7 in section 139 and new provisions of TDS @ 2% on large cash withdrawals from bank accounts in section 194N are measures which make it imperative for small traders to adopt cashless/digital payment modes for receiving and making payments so that their compliance burden is reduced.

**12.2 Use crossed cheque, ECS and prescribed electronic modes for making payments to avoid 2% TDS on cash withdrawals from bank and blockage of funds**

- The best way to avoid deduction of TDS under section 194N and blockage of funds is to reduce necessity for cash withdrawals. Make maximum payments by crossed account payee cheques, ECS and prescribed electronic modes. Wage payments be made by crossed cheques of direct account transfers as the same is now permissible under section 6 of Payment of Wages Act and will also enable the employer avail section 80JJAA deduction in respect of wages to new employees.

source: www.taxmann.com



சிறந்த தையல் !
குறைந்த விலையில் !
நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!
ரேவதீஸ் டெக்ஸ்
பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்
1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223

# Trade Receivables Discounting System(TReDS)

1. What is TReDS?

Ans. Trade Receivables Discounting System(TReDS) is an electronic platform for facilitating the financing / discounting of trade receivables of Micro, Small and Medium Enterprises (MSMEs) through multiple financiers. These receivables can be due from corporates and other buyers, including Government Departments and Public Sector Undertakings (PSUs).Simply if you are a registered MSME,if you supply any products to others companies in credit period, you can discount the bill, and get your payment immediately, with lesser interest rate, No collateral required.

2. Who are the participants in TReDS?

Ans. Sellers, buyers and financiers are the participants on a TReDS platform.

3. Who can participate as a seller in TReDS?

Ans. Only MSMEs can participate as sellers in TReDS.

4. Who can participate as a buyer in TReDS?

Ans. Corporates, Government Departments, PSUs and any other entity can participate as buyers in TReDS.

5. Who can participate as a financier in TReDS?

Ans. Banks, NBFC - Factors and other financial institutions as permitted by the Reserve Bank of India (RBI), can participate as financiers in TReDS.

6. How does TReDS work?

Ans. Broadly, following steps take place during financing / discounting through TReDS:

Creation of a Factoring Unit (FU) - standard nomenclature used in TReDS for invoice(s) or bill(s) of exchange - containing details of invoices / bills of exchange (evidencing sale of goods / services by the MSME sellers to the buyers) on TReDS platform by the MSME seller (in case of factoring) or the buyer (in case of reverse factoring);

Acceptance of the FU by the counterparty - buyer or the seller, as the case may be;

Bidding by financiers;

Selection of best bid by the seller or the buyer, as the case may be;

Payment made by the financier (of the selected bid) to the MSME seller at the agreed rate of financing / discounting;Payment by the buyer to the financier on the due date.

7. What is a Factoring Unit (FU)?

Ans. A Factoring Unit (FU) is a standard nomenclature used in TReDS for invoice(s) or bill(s) of exchange. Each FU represents a confirmed obligation of the corporates or other buyers, including Government Departments and PSUs.

8. Who can create an FU?

Ans. In TReDS, FU can be created either by the MSME seller or the buyer. If MSME seller creates it, the process is called factoring; if the same is created by corporates or other buyers, it is called as reverse factoring.

9. Whether TReDS could deal with reverse factoring?

Ans. Yes. The TReDS could deal with both receivables factoring as well as reverse factoring.

10. Whether the MSME seller would have to pay to the financier in case the buyer defaults in repayment?

Ans. No. The transactions processed under TReDS are "without recourse" to the MSMEs.

11. Whether any authorisation is required to set up and operate a TReDS platform?

Ans. Yes, authorisation is required to be obtained from RBI under the Payment and Settlement Systems (PSS) Act, 2007.

12. What is the eligibility criteria for setting up and operating TReDS?

Ans. Eligibility criteria for the purpose of setting up and operating a TReDS platform is provided in the guidelines (as amended from time to time) for TReDS issued by RBI. These guidelines are available at the following path: www.rbi.org.in → " Payment and Settlement Systems" dropdown → "Guidelines". RBI's Press Release dated October 15, 2019 may also be read in this regard.

The same can be accessed at the following web links: https://www.rbi.org.in/Scripts/bs_viewcontent.aspx?Id=3504 and https://www.rbi.org.in/scripts/FS_PressRelease.aspx?prid=48405&fn=9

13. Where can I find the details of TReDS entities authorised by RBI?

Ans. List of all authorised Payment System Operators (PSOs), including TReDS, is available at the following path: www.rbi.org.in → "Payment and Settlement Systems" dropdown → "Information Useful to Customer" → "List of Authorised Entities – Payment System Operators". Following is the web link for accessing the same: https://www.rbi.org.in/Scripts/PublicationsView.aspx?id=12043

14. Whether TReDS entities undertake KYC (Know Your Customer) of participants?

Ans. Yes. The KYC process adopted by the TReDS entities shall adhere to the "Master Direction – Know Your Customer (KYC) Direction, 2016" dated February 25, 2016 (as amended from time to time) issued by RBI.

15. What is a settlement file and who generates it in TReDS?

Ans. A settlement file provides information as to how much amount has to be debited from and credited to the accounts of participants (sellers, buyers and financiers), due on a particular date / time. In other words, it indicates how much a financier has to pay to an MSME seller, and how much a buyer owes to the financier on a particular date / time. The TReDS entities generate the settlement file and send the same to existing payment systems (for instance, National Automated Clearing House) for actual payment of funds.

16. Whether defaults on TReDS platform are the responsibility of TReDS entities?

Ans. No. Default handling is outside the purview of TReDS platforms.These FAQs are issued by the Reserve Bank of India (hereinafter referred to as "Bank") for information and general guidance purposes only. For clarifications or interpretations, if any, one may be guided by the relevant circulars, guidelines and notifications issued from time to time by the Bank.

18 ஆண்டு சேவை
பதிவு எண்: 16 / 2002
Ph : 0452 - 2679676, 4219676
மகாத்மா முதியோர் இல்லம்
Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்
7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.
exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-05/CIT-I
FCRA No. 075940608
PAN No. : AABTM1941R
A/c Name : MAHATMA'S TRUST
A/c No. : 1717115000001527
IFSC CODE : KVBL0001717 MICR CODE : 625053023
KARUR VYSYA BANK, Kamarajar Salai Br. MADURAI

E-mail : mahatma.trust@yahoo.in website : www.mahatmaoldagehome.org
ஒருநாள் நீங்களும் உதவலாமே
தங்களின் பிறந்த நாள், திருமண விழா, திருமண நாள்
பெயர் சூட்டு விழா, சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேக விழா
தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும், ரம்ஜான்
உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து விசேஷ சுபகாரிய காலங்களிலும்
எங்கள் முதியோர் இல்லத்திற்கு "நன்கொடையாகவோ (அ) உணவாகவோ"
வழங்குமாறு வேண்டுகிறோம்.
"தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு 80-G உள்ளது."
தொடர்புக்கு : மகாத்மா முதியோர் இல்லம்
செல் : 9786140570, 94437 23337

# செயல் திறன் - வள்ளுவரின் பார்வையில்

சென்ற இதழின் தொடர்ச்சி...

– B.S. ஜெனார்த்தனன்

**மகிழ்ச்சியோடு செய்– மூன்றவாது யானை:**


மிகக் கடினமானதாக இருந்தாலும் மகிழ்ச்சியோடு செய்ய வேண்டும். வீரன் ஒருவன் போர்ச் செயலில் ஈடுபட்டிருந்தான். அவனை வாரி அடிக்கவந்த யானையைக் கையிலிருந்த வேலால் தாக்கினான். உடலிற் பதிந்த வேலோடு வீரிட்டு ஓடியது யானை. யானையோடு வேலும் போயிற்றே என்று வீரன் வருந்தினான். அப்பொழுது மாற்றான் ஒருவன் எறிந்த வேல் ஒன்று அவன் மார்பில் பாய்ந்தது. வீரன் அதைப்பற்றித் திருகிக் கையில் எடுத்துக்கொண்டு, மேலும் போர் செய்யத் தனக்கு ஒரு ஆயுதம் கிடைத்துவிட்டதே என்று மகிழ்கிறான். போரிட இன்னுமொரு யானை வந்தாலும் வரட்டுமென்று மகிழ்ச்சியோடும், வெறியோடும் வேலேந்தி நோக்குகிறான். அவன் நெஞ்சில் பகைவனுடைய வேல்தாக்கிய புண்ணையும், அதிலிருந்து கொட்டும் குருதியையும் அவன் நினைத்தும் பார்க்கவில்லை. அவன் நெஞ்சில் மகிழ்ச்சியே கூத்தாடுகிறது என்று வள்ளுவர் போர்த்திறத்திலும், ஒரு செயல் திறத்தைக் காட்டி நம்மை மகிழ்விக்கிறார்.

**கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்**

**மெய்வேல் பறியா நகும்.**

- குறள்: 774.

இதுவே மூன்றாவது யானைக்கான குறள்.



**ஊக்கத்தோடு செய் – நான்காவது யானை:**



எந்த காரியத்தைச் செய்தாலும் ஊக்கத்தோடு செய்தல் வேண்டும். அப்போது அச்செயல் விரைவில் வெற்றிபெறும் என்று வள்ளுவர் கூறுகிறார். அங்கும் ஒரு யானை, மிகவும் பெரியது. நீண்ட தந்தங்களையுடையது!. அப்போது ஒரு புலி யானையை நோக்கிப் பாய்ந்தது. மிகச் சிறிய உருவம், மிகச்சிறிய நகம் என்றாலும், அப் புலி ஊக்கத்தோடு இடது புறத்திலிருந்து வலதுபுறத்துக்கும் வலது புறத்திலிருந்து இடது புறத்துக்குமாக யானை மீது பாய்ந்து தாக்குகிறது. யானை ஒரு பக்கம் திரும்புவதற்குள்ளாகப் புலி பல பக்கங்களிலும் தாக்குகிறது. அத்தாக்குதலைத் தாங்க முடியாமல் யானை அஞ்சி ஓடுகிறது. கூர்மையான நீண்ட தந்தத்தை உடைய மிகப்பெரிய யானை மிகச் சிறிய நகத்தையும் மிகச்சிறிய உருவத்தையும் உடைய புலியின் தாக்குதலுக்கு அஞ்சுகிறது. காரணம், புலிக்கு உள்ள ஊக்கமும் சுறுசுறுப்பும் யானைக்கு இல்லாமையேயாகும். இக்காட்சியை வள்ளுவர் ஒரு குறளால் காட்டிச் செயல்திறனுக்கே ஓர் ஊக்கத்தை ஊட்டுகிறார்.

**பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**

**வெரூஉம் புலிதாக் குறின்**

- குறள்: 599.

யானை பருத்த உடம்பை உடையது. பெரிய தந்தங்களை உடையது. ஆயினும் ஊக்கமுள்ள புலி தாக்கினால் அஞ்சி ஓடும். இது நான்காவது யானை.

**துணைகொண்டு செய் – ஐந்தாவது யானை.**

எல்லா மனிதராலும் எல்லாக் காரியங்களையும் செய்ய முடியாது என்ற உண்மையையும் வள்ளுவர் உணர்ந்திருக்கிறார். ஒருவனால் செய்ய முடியாத காரியத்தைச் செய்யும்படி அவனைக் கட்டாயப்படுத்துவது தவறு என்றும்


வாழ்வில் வளம் பெற! வர்த்தகத்தில் வெற்றி பெற!!

SCT

24X7 TV CHANNEL IN MADURAI

SOURASHTRA CABLE TV

Sourashtra Cable TV SCT

Get in on Google Play Store

94430 34909

99424 17417

98421 91906

sctchannelmdu@gmail.com

GSTIN : 33ADWFS4457J1ZD

179 177 41 64 77

விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்




தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முறையாக மேற்கொண்டால் இந்நோய் பரவலை கட்டுப்படுத்த முடியும்.

கருதுகிறார். ஒவ்வொருவர்க்கும் செயல்திறன் என்பது ஓரளவிலேயே இருக்கும் என்றும் எண்ணுகிறார். சிலரால் சில காரியங்களைச் செய்ய முடியாது. மனிதனால் ஒரு மதங்கொண்ட யானையைப் போய்ப் பிடிக்க முடியுமா? முடியாது. ஆனால் அவன் அதைப் பிடித்தாக வேண்டும் என்றும் கூறுகிறார். எப்படி? மற்றொரு பழகிய யானையைக் கொண்டு அந்த யானையைப் பிடிக்கலாம். அதுபோலத் தன்னால் செய்ய முடியாத ஒரு செயல் மிகப் பெரியதாக இருந்தாலும், அதற்கு உற்றவர் துணையுடன் அக் காரியத்தைச் செய்தாக வேண்டும் என்று செயல்திறனுக்கு இங்கும் யானையையே காட்டி ஒரு புதுவழி வகுத்துக் கூறியுள்ளார்.

**வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்**

**யானையால் யானையாத் தற்று.**

- குறள்: 678.

ஒரு செயலைச் செய்யும் போது அச்செயலால் மற்றொரு செயலையும் செய்து முடித்துக்கொள்ளல், ஒரு யானையால் மற்றொரு யானையைப் பிடித்தலைப் போன்றது. இது ஐந்தாவது யானை.

**பொருளை வைத்துச் செய் – ஆறாவது யானை:**

ஒரு வணிகத்தை நடத்தினாலும் ஒரு தொழிற்சாலையைத் தொடங்கினாலும் நிறையப் பொருள் வைத்துத் தொடங்க வேண்டும் என்று வள்ளுவர் கருதுகிறார். ஒரு வணிகன் 100 அரிசி மூட்டைகளைக் கொள்முதல் செய்து வைத்திருந்தான். திடீரெனச் சந்தையில் விலை குறைந்தது. அந்த விலையிலும் 100 மூட்டைகளைக் கொள்முதல் செய்தான். பின்னும் விலை குறைந்தது. அதிலும் 100 மூட்டைகளைக் கொள்முதல் செய்தான். கடைசியாக அவனது சராசரி விலையும் சந்தை விலையும் ஒன்றாக வந்தது. அதற்குமேல் விற்று இலாபம் அடைந்தான். அவனிடம் நிறையப் பொருள் இல்லாதிருந்திருக்குமானால் அவன் தொழிலில் இழப்பு ஏற்பட்டிருக்கும். இதைக் காட்டவும் வள்ளுவர் நம்மை யானைக் காட்டுக்கு அழைத்துச் செல்கிறார்.

கோழிச்சண்டை, ஆட்டுச்சண்டை முதலியவைகளைப் பார்க்க அதிக ஆசை உண்டாகும். அதுபோல தரையிலிருந்து யானைச் சண்டையைப் பார்க்க முடியாது. பார்க்கும்போது பார்ப்பவர்க்கு துன்பமும் வரக்கூடம். அதற்காக அவர்களைக் குன்றின் மீது நின்று யானைச் சண்டையைப் பார்த்து மகிழச் சொல்கிறார் திருவள்ளுவர். நிறையப் பொருளை வைத்துக் கொண்டு வணிகத்தையோ தொழிற்சாலையையோ நடத்துகின்ற செயல்திறன், குன்றின்மீது இருந்து யானைச் சண்டையைக் கண்டு மகிழ்வது போன்றது என்று வள்ளுவர் விளக்குகிறார்.

**குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று**

**உண்டாகச் செய்வான் வினை.**

- குறள்: 758

இதுவே ஆறாவது யானைக்கான குறள்.

- தொடர்ச்சி அடுத்த இதழில்

## கொரோனா நிவாரணம் அளித்த கொடை உள்ளங்களுக்கு நன்றி

நமது ஸௌராஷ்ட்ர சமூகத்தில் பெருமளவில் நடுத்தர மற்றும் பின்தங்கிய பொருளாதார வசதியைக் கொண்ட குடும்பங்கள் அதிகம். இந்த கொரோனா பொதுமுடக்க பாதிப்பினால் பொருளாதாரத்தில் பெரிதும் அம்மக்கள் பாதிப்புக்குள்ளாகி தவித்து வந்த நிலையில், நம் சமூகத்தில், கொடை உள்ளம் படைத்த பலர் தாமாகவே முன் வந்து தங்களால் இயன்ற நிவாரணப் பொருட்களை நம் மதுரையின் பல்வேறு பகுதிகளில் வாழும் நம் சமுதாய மக்களுக்கு வழங்கியுள்ளனர்.

அதே சமயத்தில், அங்கத்தினர்களிடம் நமது சேம்பர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பிரதம மந்திரி மற்றும் முதலமைச்சர் நிவாரண நிதிக்கு நிதி அளித்துள்ளனர்.

நிவாரணம் அளித்த அனைவரையும் எமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் மனமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது. அவர்களின் குடும்பத்தினர் ஆரோக்கியத்துடன் வாழ இறைவனை வேண்டுகிறோம்.

AWARDS
Raj Tv
Vasanth Tv
Vijay super
Vijay Tv
Tms Award
ROYAL ROMANTIC
No.7, Pacharisikara thoppu cross street,
Kamarajar Salai, Opp to Old Dhinamani Theatre,
Madurai-9. Tamilnadu.
Website : www.bestnumerologist.com
Youtube / Google Map / Whatsapp Link : 9842111411

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர்
ஏகலை எண்கணிதன்
உலக அளவில் ஸௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்
"ஷர்வ ரக்சன்" MRS
BEST NUMEROLOGIST
பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வசியம் மிகுந்த பெயர் "எண் கணித ஜோதிட" முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும்
திருமணப் பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்
FOR APPOINTMENT
98421 11411



Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, 2nd Floor, Madurai - 625 001.
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY



மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com



LAABH
SAMACHAR
MULTI COLOR ADVT.

Contact: 93441 97952



LAABH
SAMACHAR
MULTI COLOR ADVT.

Contact: 93441 97952

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2019-2021
Printed Matter

Date of Posting : 20.05.2020 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2019 - 2021
Date of Publication 20th of Every Month

TÜV INDIA
An ISO 9001:2015 Certified Company

THE CONSTRUCTIVE COMPANY
www.tcco.co.in

Design & Construction of Industrial Buildings, Mixed Use Buildings, Residential Apartments, Academic Institutions, Aircraft Hangars, Uber Luxury Villas, Special Structures.

Land Line: 0452-25 81 450
Email: info@tcco.co.in

Some of our Completed Projects



HEAD OFFICE :
No 264, LIG Colony, Opp. SUNDARAM PARK,
OFF LAKE VIEW ROAD, KK NAGAR , MADURAI - 625 020

VALE SPECIALTY ORTHO CLINIC
வேல் சிறப்பு எலும்பியல் மையம்
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement
45, கலெக்டர் ஆபீஸ் ரோடு, ஹோட்டல் ஸ்டார் ரெசிடென்சி எதிரில், அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை - 20.
Ph: 0452-4367597, 97871 91156 email : knsubra@yahoo.com | Web : www.shoulderarthroscopy.co.in

- தீராத மூட்டு வலி உள்ளவர்கள்
- தோள்பட்டை வலி உள்ளவர்கள்
- மாடிப்படி ஏறி / இறங்க சிரமப்படுபவர்கள்
- விளையாட்டு காயம் அடைந்தவர்கள்



Dr. K.N. SUBRAMANIAN MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

கைத்தறியில் ஓர் புதுமை
Electronic Jacquard



Technical Details :
- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm



Applications :
- Sarees • Bed Sheets • Furnishing • Dress Material
- Blankets • Made Ups • Shirting



N.S. Rajan

SRE CORPORATION
359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com



T.S. Saravanan

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org